உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்: உ. அட்சய—தை. மலர்: எ, அ.

உ

கற்புடைய மகள் கண்ணகி.

பண்டிதர் எல். உலகநாத பிள்ளையவர்கள்.

(முற்றொடர்ச்சி.)

அந்நேரத்தில் தோழியாகிய தேவந்தி என்பவள், கோவலன் பிரிவால் கண்ணகியுற்ற துன்பநினைந்து வருந்திச், சாத்தனது கோட்டத்தை அடைந்து, மலர்தூவி வழிபட்டுப், பின்னர்க் கண்ணகியை அணுகி, "நங்காய்! நீ கணவனோடு வாழ்வு பெறுவாயாக" எனவாழ்த்தினாள்.

"பைந்தொடீ! நீ இங்ஙனம் கூறுதலால் என் கணவனைப் பெறுவேனெனினும், என் நெஞ்சம் ஐயுறுகின்றது. ஏனெனிற் கூறுவேன். நேற்றிரவில் ஓர் கனாக்கண்டேன். அக்கனவின்கண் என் காதலன் என்னைக் கைப்பற்றிச் செல்ல இருவரும் ஒரு நகரிற் புகுந்தோம். அவ்வூரார் ஏலாததொரு பழியை என்மேற் சுமத்தினர். அதனால், கோவலற்கு ஒரு தீங்குற்றதென்று பிறர்சொல்லக்கேட்டு மனம்பொறாது அவ்வூர் அரசன் முன்னர்ச் சென்றறியாதேன் சென்று, வழக்குரையாதேன் வழக்குரைத்தேன். இழித்தக்க கனாக்காணிற் பிறர்க்குரையார். ஆதலால், இத்தீக்கனாவை நினக்குரையேன் இங்ஙனம் தீவினையுற்ற

என்னோடு பொருந்திய மிக்கோனுடன் யான் பெற்ற பேறறிவை நீகேட்கின், அதுநினக்கு நகையை விளைவிக்கும்" என்றனள் கண்ணகி.

"போற்றொடீ! நீகண்டகனவை நினைத்து வருந்தவேண்டா. நின் கணவன் உன்னை வெறுத்திலன். அவனை முன்னிட்டு முற்பிறப்பில் ஒரு நோன்பு செய்யத் தவறினை; அதனால் தீங்குற்றனை. இத்தீங்கு தீர்வதற்கு வழியுரைப்பேன்கேள். சங்கமுகத்திற்கு அயலிலுள்ள நெய்தற் கானலில், சோமகுண்டம், சூரிய குண்டம் என்ற இரண்டு பொய்கைகளுண்டு. அவற்றிற் படிந்தாடிக் காமவேள் கோட்டத்திற்சென்று அவனைத் தொழுவார், இம்மையிற் கணவரோடும் பிரிவின்றியிருந்து இன்புற்று, மறுமையினும் போகபூமியிற் போய்ப் பிறந்து கணவரோடு நெடுங் காலம் இன்பநுகர்ந்திருப்பர் ஆதலால், அவற்றை நாமும் ஒரு நாள் ஆடக்கடவோம்" எனத் தேவந்தி கூறினள்.

அவ்வுரை கேட்ட கண்ணகி, "அன்னாய்! என்னை அறியாதார் போலக் கூறுகின்றனை? கணவன் சாகிற் சாதலும், நோவின் நோதலும், அவன் பிரிந்தகாலையில், 'இதனாற்பயனென்னை' எனப்பூவும் புனைதலின்றித் தனித்திருந்து, காமனென்று பெயருங் கூறாராய்க் கணவனையே வணங்கி வாழ்வார் குலமகளிர். குலமகட்குத் தெய்வங் கொழுநன் என்றால், புண்ணியத்துறை படிந்து பிறதெய்வம் தொழுதல் எங்கட்கு எவ்வாறு அடுக்கும்" என்றனள்.

இங்ஙனம், மாலைப்பொழுதில் கண்ணகியும் தேவந்தியும் தம்மில் உரையாடியிருக்கையில், ஏவன்மகளிர், கோவலன்வருகையை உணர்த்த உணர்ந்த கண்ணகி, முன்றிலைக் குறுகிக் காதலனைக் கண்டு வணங்க, அவனும் வாயில்பலவும் கடந்து பள்ளியறையிற் புக்கபின், தன்னருகில் நின்ற கண்ணகியை நோக்கி, "அரும் பெறற் பாவாய்! நின் பொன்னிகர் மேனி என்னே பொலிவழிந்துள்ளது. காண என் மனங் கவல்கின்றது. பொய்யை மெய்யாகப் பொருந்தக் காட்டும் பரத்தையோடு கூடியொழுகினேன். அதனால், நம் முன்னோர் தேடித்தந்த பொருட்குவை எல்லாம்

தொலைந்தன. 'இல்லானை இல்லாளும் எள்ளுவள் ஈன்றெடுத்த தாய் வேண்டாள், செல்லாதவன் வாயிற்சொல்' என்பதை யுன்னுந்தோறும் பெருநாணுத் தருகின்றது. இதற்குயாது செய்குவேன்?" என்றனன் கோவலன்.

'இலம்பாடு நாணுத்தரும்' என்றனர் மாதவிக்குக் கொடுக்கும் பொருட்கு வழியில்லாமையால் இவ்வாறு கூறினர்போலும். இவரது மனத்தளர்ச்சியைச் சிறிது மாற்றவேண்டும் எனக் கருதியகண்ணகி "புன்னகைஅரும்பியஇன்முகத்துடன்" காதல! இன்னும் என்னிடத்தில் இரண்டு சிலம்புகள் இருக்கின்றன; அவற்றையும் கொண்டருள்க" எனக்கூறினள்.

"சேயிழை; நீ சொன்ன இச்சிலம்புகளைக் கூடலிற் சென்று விற்றுவந்த பொருளை முதலாகக்கொண்டு வாணிகஞ்செய்து பொருள்தேடத் துணிந்தேன். நீயும் என்னுடன் வருக" எனக் கோவலன் இயம்பக், கண்ணகியும் அதற்கு உடன்பட, இருவருமாக அன்றிரவில் எவரும் அறியாவண்ணம் கடையாமத்திற் புறப்பட்டுக், காவிரியின் வடகரையாக மேற்கு நோக்கி வழிக் கொண்டு, காவதம் கடந்து ஒரு இளமரக்காவினை யடைந்தனர்.

உடனே, கண்ணகி இளைப்பாற் குறுகவுயிர்த்து முள்ளெயிறிலங்க மெல்லிய மழலைமொழியால், "மதுரை மூதூர்யாது? எனவினவினள்.

அப்பொழுது கோவலன் சிந்திப்பான் "மதுரையோ என்றூல் முப்பது காவதத்துள்ளது. ஒரு காவதம் கடக்குமுன்னர் அடியும் இடையும் வருந்தி இளைத்தனள். இவட்கு, வழியினளவை உள்ளவாறு உரைப்பேனேல் மனம்வருந்துவள். ஆதலால் அறுகாவதம் ஐங்காவதம் என அண்ணிதாக நினையுமாறு கவர்பொருள்படக் கூறுவேன்" எனத்துணிந்து "தேமொழி! நீ வினவிய மதுரை, நம் மூரினின்றும் ஆறைங்காவதம் தான்" எனமொழிந்து, துன்பந் தோன்றுவகை நகைத்து, மெத்தென நடந்து, பின்னரும் சிறிதிடைச் சென்று, அங்குத் தவஞ் செய்திருந்த கவுந்தியடிகளைக் கண்டு, கண்ணகியோடு அடிதொழுதனன்.

அடிதொழுதார் இருவரையும் கனிவொடுநோக்கி ஆசிகூறி அருகிருத்திய அடிகள் "அழகும் குடிப்பிறப்பும் ஒழுக்கமும் பிறவும் இழுக்கின்றி நிரம்பிய நீங்கள் தீவினையாளரைப்போல உமதிடத்தை விடுத்திட்டு யாதுகருதி இங்குவந்தீர்கள்?' என்று கேட்டனர். அதற்கு கோவலன் வேறொன்றுங் கூறுனைப், "பொருள்தேடுதல் காரணமாக மதுரைக்குச் செல்கின்றேன்" என்றியம்பினன். "நீ கருதியது அதுவாயின், இவள் சிற்றடிகள், பருக்கைக்கற்படக் கன்றும். காடிடையிட்ட வழியைக்கடத்தற்கு இவள் ஏற்ற தன்மையளல்லள். இவையேயன்றி இவளை உடன் கொண்டு,சேறல் குடிப்பிறப்பிற்கும் ஏலாது. செலவைத் தவிர் மின் எனவும் தவிர்கின்றிலீர். இனி ஊழ்வினை என்செய்யுமோ, அதனை அறியவல்லார் யார்?" எனப் பரிவுற்றிரங்கிய அடிகள், "அறவுரை கேட்டு அறிவனைத் தொழுதற்கு மதுரை செல்ல முன்னரே ஒருப்பட்டயானும் வருகின்றேன்'' என்று புறப் பட, மூவருமாக வழிக்கொண்டு காடிடையிட்ட வழியையும் வையையும் கடந்து மதுரையின் மதிற்புறத்தில் முனிவரது இருக் கையில் போய்த் தங்கினார்கள்.

வைகறைப்போதில் கோவலன் கவுந்தியடிகளைக் கைதொழு தேத்தி, "தவத்துறைநின்றீர், விழுக்குடிப் பிறந்த ஒழுக்கமு டையோர், மகளிரோடு நெறிச்சொல்லார். யானோ என்றால், இம்மெல்லியல் துன்புறக், கனவினும் நினைந்தறியாத தேயத்துக் கடுவழிநடக்கும் சிறுமையுற்றேன். இவ்வுலகில் என்போலும் சிறுமையுற்றார் எவருண்டு?" என்றுகூறி வருந்தினன். அதைக் கேட்ட அடிகள், "முற்பிறப்பில் நல்வினை செய்தநீ, பின்னர்ச் சிறிது தீவினையும் செய்தமையால், இவ்வாறு நின்காதலியோடும் தனித்திருந்து துன்புற்றாய். துன்பமுற்றவர் நின்னளவினரல்லர், முன்னும் பலருண்டு. அவருள், நாடுவிட்டுக் காடடைந்து மனைவி யோடும் பெருந்துயரடைந்த இராமனையும் நளனையும் நீ அறி குவை. துன்பமுறுதலின், அவரோடுநீயும் ஒத்ததன்மையை எனி னும், அவர், தம்காதலிபிரிதலிற் பேதுற்றனர். நீயோ, காதலி பிரியாது வாழும் நல்வாழ்க்கை பெற்றனை யன்றோ, அவரினும் வேறுபட்ட நன்மையுற்றனை யன்றோ?" எனத்தேற்ற ஒருவாறு

தேடியகோவலன், தென்னவர்க்குரியதொன்னகரமாகிய மதுரையின்கட் சென்று பன்னரும் வளம்பலவும் கண்டு மகிழ்ந்து தவப்பள்ளியை அடைந்து தான் கண்டவைகளை அடிகட்குப் பாராட்டி உரைத்திருந்தனன். அவ்வமையத்து அங்கு வந்த மாடலன் என்னும் மறையவன், "துறவிகள் வாழும் இவ்விடத்தில் இல்லற நிலையினராகிய இவர் இருத்தலாகாது" என்னுமளவில் இடைக்குலமகள் மாதரி என்பவள் போந்து கவுந்தியடிகளைத் தொழுதனள்.

அவளது நல்லொழுக்கத்தைக் கண்டதும், "ஆவைக் காத்தலும் அதன் பயனை யார்க்கும் அளித்தலும் செய்யும் இடையர் குடிவாழ்க்கையில் வருவதோர் கொடுமையில்லை. இம்முதுமகள் மனத்தழுக்கில்லாத செவ்வியள். இவளிடத்து இம்மங்கையை அடைக்கலமாக வைப்பதால் தீங்கொன்றும் வராது." எனத் தம்முளத்தெண்ணிக், கண்ணகியைப் பற்றி உண்டாகியிருந்த கவலையொழிந்த அடிகள், "மாதரி கேளாய்! இம்மடந்தை தன் கணவனது தந்தையின் பெயரைக் கேட்பாராயின் இவ்வூரில் வாழும் இவன் குலத்தினர், பெறற்கரும் பொருள் பெற்றவர் போல நல்விருந்தாக எதிர்கொண்டு இவரையும் தம் மனையகத்தே கொண்டு வைத்துக்கொள்வர். அங்ஙனம், செல்வர் மனையகத்தே சென்று புகுமளவும் இடைக்குல மடந்தாய்! இவளை நின்பால் அடைக்கலம் தந்தேன். இம்மடந்தையை நன்னீராட்டிக் கண்ணிற் கஞ்சன மெழுதிக் கூந்தலிற் சின்மலர் பெய்து தூய மடிப்புடவையை யுடுத்து, இவ்வாயிழைக்கு ஆயமகளிரும் செவிலித்தாயும் நற்றாயும் நீயேயாய்த் தாங்குவாயாக. இந்நங்கை தன் சிற்றடியை மண்மகளும் முன்னர்க் கண்டறியாள். தன் காதலன் மெய் கதிரின் வெம்மையால் வருந்தியதென்று கலங்குவதல்லது, நடுங்குதுய ரெய்தி நாவும் புலர வாடினும் தன் துயரென வேறு காணாத தன்மையள் தம் காதலர்க்கு இவ்வாழ்க்கைத் துணையாகிய மகளிர்க்கு இன்றியமையாத கற்பைக் கடமாகப் பூண்ட இத்தெய்வமல்லது வேறுதெய்வத்தினை யாங்கண்டிலேம். அதுவுமன்றிக் காலமழை பொய்த்தறியாது; விளம் பிழைத்தலையறியாது; வேந்தன் கொற்றம் சிதையாது, பத்தினிப்பெண்டிர்

இருந்த நாட்டி'னென நல்லோர் கூறும் நல்லுரையை நீ அறியாயோ? தவத்தினர் கொடுத்த அடைக்கலம் தான் சிறிதாயினும் மிகப் பேரின்பம் தருவது. அதனை யான் உரைப்பன் நீ கேட்பாயாக.

காவிரிப்பூம்பட்டினத்தில், எட்டிச்சாயலன் என்று ஒரு வணிகன் இருந்தான். அவன் மனைக்கிழத்தி தன் மனைப்புகும்புக்க ஒரு மாதவனை எதிர்கொண்டனள். அப்பொழுது, உணவின்றி வற்றிய குரங்கொன்று அஞ்சி பொதுங்கி யுள்புக்கு அம்மாதவனை அடிவணங்கி அவன் உண்டொழிந்த மிச்சிலும் உகுத்த நீரும் அருந்திப் பசி தீர்ந்து அவனை நோக்கிற்று. அக்குரங்கின் முகச்செவ்வியைக் கண்ட அப்பெரியோனும் மனமகிழ்ந்து, 'இதனை நின்மக்களின் ஓம்புக' என அவள் கையிற் கொடுத்தனர். அவளும் அம் மிக்கோனது மொழி தப்பாமற் பாதுகாத்து வருநாளில் அக்குரங்கு இறந்தது. அதற்குரிய ஒரு பகுதியைத் தக்கார்க் களிக்கின்றவள் 'இதன் தீய பிறப்பறுக, என அளித்தனள். அதனால் மத்திம நாட்டு வாரணவாசியில் உத்தரகௌத்தனெனும் மன்னவனுக்கு, அறிவினும் உருவினும் சிறந்த அருமந்த மகனாகத் தோன்றிப் பலவகைப்பட்ட தானங்களையும் புரிந்து முப்பத்திரண்டு யாண்டளவும் அரசாண்டிருந்த பின்னர்த் தெய்வ யாக்கையைப் பெற்றது. இவ்வரலாற்றினைக் கேட்ட அருந்தவத்தோரும் எட்டியும் அவன் மனைவியும் பேரின்ப வீட்டினைப் பெற்றனர்" எனக் கண்ணகியின் பெருமையையும், தவத்தினர் கொடுக்கும் அடைக்கலப்பொருள் சிறிதாயிருப்பினும் அதனால் பின் புண்டாகும் பயனின் பெருக்கத்தைபும் அறிவித்துக் கண்ணகியை அவள்பால் தந்தருளினர்.

பின்னர் கண்ணகி, மாதரியோடு இடைச்சேரியை அடைந்து அவள் தந்த செந்நெல்லரிசி பல்வகைப் பசுங்காய் பால் தயிர் முதலியவை கொண்டு செவ்விதாகச் சமைத்துத், தன்கணவனைப் பனையோலைகொண்டு புனைந்த தடுக்கிலிருத்திக் கான்மலர் கழுவி, நீர்கொண்டு நிலத்தை மெழுகி, ஈனு வாழையின் இளங் குருத்தை விரித்து அதில் அன்னம்படைத்து, "அடிகள் அமுதுசெய்தருள்க' என்று வேண்டினள். அவனும் அதனை இனிதுண்டு,

மெல்லிலேயும் அடைக்காயும் தந்துநின்ற கண்ணகியை வருகென் அருகழைத்து, "மெல்லியன் மடந்தை! நின் அடிகள் கடுஞ்சுரத்தின் அருநெறியிற் போந்ததற்கு இரங்கி எம் முதுகுரவர் என்ன இடும்பை யுற்றார்களோ? யாம் இங்ஙனம் உற்றது கனவோ; நனவாயின் முன்செய்த தீவினைப்பயனே? உள்ளக் கவலையால் இப்பொழுது ஒன்றும் அறிகிலேன். வினைரோடு கூடி நல்லொழுக்கத்தைக் கைவிட்ட எனக்கு இனி தீக்கதியன்றி நன்னெறியுண்டாமோ? அதுவுமன்றி இருமுதுகுரவர்க்குச் செய்யும் ஏவலும் பிழைத்தேன்; நினக்கும் சிறுமை இழைத்தேன். இவ்வொழுக்கம் இழுக்கம் என்பது சிறிதும் நினைந்திலேன். என் நிலைமை இதுவாயின், "இந்நகர்க்கு எழுக" என யான் உரைக்கு முன், அது முறைமையன்றென மறுத்திலை. உடனே என்னோடு ஒருப்பட்டெழுந்தாய். நீயும் ஆராயாமல் என்ன காரியம் செய்துவிட்டனை" என்று இரங்கிக்கூறினன்.

அறவோர்க்களித்தல் முதலியவை துறந்த யான், நின் பிரிவா லுண்டாகிய துன்பத்தைக் கரந்தொழுகினேன். அதனை அறிந்த நம் இருமுதுகுரவரும் அன்போடு அருள்கலந்த மொழியால் என் பெருமையைப் பாராட்டினர். அதைக்கண்டு யான் பொய் முறுவல் செய்தேன். அது நெஞ்சத்தடக்கிய மெய்வருத்தமும் மனக்கவலையும் வெளிப்படயான் வாய்திறந்துசொல்லுவது போலும் இருந்ததென்று அவர் வருந்தினர். தீய ஒழுக்கத்தை நீர் மேவினீர் எனினும் உம்முடைய சொல்லைச் சிறிதும் கடந்து நடவாத வாழ்க்கையேனாதலால், அதற்கு உடன்பட்டெழுந்தேன்" என்றனள் கண்ணகி.

"தாய் தந்தையர் குற்றேவன் மகளிர் செவிலித்தாயர் முதலியோரை நீங்கி, நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்னும் நான்கும் துணையாக என்னொடும் வந்து என் தனிமையைத் தீர்த்த பொன்னே! நாணின் பாவாய்! நீணில விளக்கே! பொற்பின் செல்வி! கற்பின் கொழுந்தே! யான் நின் சிறடிச் சிலம்பொன்றினைக் கொண்டுபோய் விற்றுவருவேன்; வருந்துணையும் வருந்தாது ஆற்றியிரு" என்று தேற்றிச் சிலம்பைக் கைக்கொண்டு

அரிதிற் பிரிந்த கோவலன் தன் எதிர்ப்பட்ட தீய நிமித்தங் களையும் பொருட்படுத்தாமல் இடைச்சேரியைக் கடந்து மாடங் கள் மலிந்த கூடலின்கண் பீடிகைத் தெருவிற் போவானாயினன். அப்பொழுது தட்டார் பலர் தன் பின்வர மெய்ப்பையிட்டுக் கையிற் கொடிறு பிடித்துக் காலனைப் போல எதிர்ப்பட்ட பொற் கொல்லனைக் கண்ணுற் கண்டனன். "இவன் தென்ன வன்பால் வரிசை பெற்ற பொன் வினைஞன் போலும்" எனக் கருதி அணுகச் சென்று "அரசன் தேவி அணிதற் கேற்ற சிலம் பொன்று என்பால் உளது அதனை விலைகாண்டற்கு நின்னா லிய லுமா, என வினவினன்.

உடனே பொற்கொல்லனும் தான் வல்லனுதலைப் பணி வுடன் குறிப்பிக்க, கோவலன், சிலம்பினைப் பொதிந்த முடிப்பை அவிழ்த்தெடுத்து அவன் கையிற் கொடுப்பச், சிலம்பின் தொழி லருமையை நோக்குவான்போலக் கோவலன்மீது வஞ்சம் புரியும் வழியை நெஞ்சால் நோக்கி, "ஐய! இப்பெருவிலைச் சிலம்பு கோப்பெருந்தேவிக் கல்லது வேறெவர்க்கும் பொருந்தாது. யான் போய் இதனை வேந்தற்கு உணர்த்தி வருமளவும் நீர் இங்கிரும்' என்றுரைத்துக் கோவலனைத் தன் மனைக்கருகில் அக்கசாலையின்கண் இருக்கச்செய்து தென்னவன் கோயிலை அடைந்து, தன் வருகையை அரசற் குணர்த்த வாயிலோனை வேண்டினன். அன்னவனும் மன்னவனது இடைதெரிந்துரைப்ப உட்புகுந்த பொற் கொல்லன், திருமுன்னர்ச் சேய்மையிற் கை கூப்பிப் பன்முறையும் தொழுதெழுந்து கோட்டிய மெய்யனாய் வாயிலமைத்த கையுடன் ஒரு மருங்கில் ஒதுங்கி நின்று, "அரசரேறே! கன்னக்கோலும் கவைக்கோலுமின்றித் தான் பயின்ற 'துயின் மந்திரமே துணையாக வாயில் காவலரைத் துயி லச்செய்து, அரண்மனையில் உவளகத்தில் அணிகலப் பேழையு ளிருந்த எம்பிராட்டியின் காற்சிலம்பினைக் கவர்ந்து சென்ற கள் வன், அடியேனது சிறுகுடிலில் வந்திருக்கின்றனன்" என்றனன்.

கேட்டபோதே சினையலர் வேம்பன் சிறிதுந் தேரானுகி நாட்டம் சிவந்து, காவலாளரைக் கூவி, தேவியின் காற்சிலம்பு

இவன் கூறும் கள்வன் கையின்கண் இருப்பின், அவனைக் கொல்வதற்கு. அச்சிலம்புடன் இங்குக்கொணர்க எனக்கூற நினைந்தவன், வினைவிளைகின்ற காலமாதலால், "அவனைக்கொன்று அச்சிலம்பினைக் கொணர்வீர்" என்று கட்டளையிட்டனன்.

ஆங்ஙனம் காவலன் கூறியவுடனே, ஏவலாளர் உடன்வரத் தன் எண்ணம் முடிந்ததென்று நினைந்து மகிழ்ந்து செல்லும் பொற்கொல்லன், கோவலனைக்குறுகி, "ஐய! இவர்கள் மன்னவன் ஏவச் சிலம்புகாண வந்தவர்கள்; அதனைக் காட்டுமின்" எனக் கூற, அவனும் காட்ட, அவர்கள் கண்டு நிற்கையில், அச்சிலம் பின் அருமையை அவர்கட்கு எடுத்துரைப்பவன் போல அவர் களை வேறாக அழைத்து, "இது கோப்பெருந்தேவியின் சிலம் பிற்கு இணையாய சிலம்பு. இதனை இவன் கையிலிருப்பக் கண் டீர்கள். இனி மன்னவன் ஆணையைத் தன்னமின்றி நிறை வேற்றிச் சிலம்பு கொண்மின்" எனக் கூறினன்.

ஏவலாளர் கோவலனை உற்றுநோக்கி, அவன் முகத்தில் கள்வனுக்குரிய குறியொன்றும் காணப்படாமையின், "இவன் கள்வனல்லன், ஆதலால் கொல்லத்தக்கவனல்லன்" என்று மறுத் தனர்.

அப்பொழுது பொற்கொல்லன், அவர்களைச்சினந்துநோக்கி "உங்கள் மதியிருந்த மாண்பென்னே! என இகழ்ந்துரைத்துக் களவு நூலின் திறம் கண்டறியீராதலின் இவ்வாறு கூறி னீர். அதிற் சிறிது கட்டுரைப்பேன் கேண்மின். களவுகண்டுண் ணுமாக்கள், மந்திரம் தெய்வம் மருந்து நிமித்தம் தந்திரம் இடம் காலம் கருவி என்னும் எட்டினையும் துணையெனக் கொள் ளுவர். இவற்றுள் அவர் பயின்று வைத்த மந்திரத்தை நாவில் நவிற்றுவாராயின், அவரை எவரே காணவல்லார்? தாம் வழி படு தெய்வத்தை மனம் தெளிந்து நினைப்பாராயின் கையில் அகப்பட்ட பொருளை நமக்குக் காட்டியும் தப்புவர். மருந்தினுல் நம்மை மயக்குஞ் செய்வாராயின் நாம் இருந்த இடம்விட்டுப் புடைபெயர்ந்திடோம். நிமித்தம் வாய்த்தாலல்லது அரிய

பொருள் தானேவந்து கைப்புகினும் அதனை விரும்பிடார். களவு நூலிற் சொல்லிய தொழில்களை எண்ணிச் செய்வாராயின், தாம் மண்ணுலகி லிருப்பினும் விண்ணுலகிலுள்ள இந்திரன் மார்பி லணிந்த ஆரத்தை எய்திட வேண்டின் அதனையும் எய்துவர். இப்பொருளைக் கோடற்கு இதுவே இடமெனத் துணிவாராயின் அவ்விடத்து அவரை யாவரே காணமுடியும்? களவு கொள்ளும் காலம் இதுவெனக் கருதிப் பொருளைக் கைப்பற்றுவராயின் யாவரேயாயினும் அவரை விலக்க முடியுமா? கருவிகொண்டு பொருளைக் கைப்பற்றுவாராயின் அவரைக் கண்கொண்டு காண வல்லார் யார்? அவர்க்கு இரவென்றும் பகலென்றும் இரண்டில்லை. அவரது செய்கை யார்க்கும் அறிவரிது. அவர்க்கு அவரே ஒப்பாதலன்றி உலகத்தில் பிறரை ஒப்பாகக் கூறுதலுண்டோ!" எனக் களவு நூலின் தன்மை பலவும் எடுத்துக்காட்டி, "இவன் கள்வனே. இவனது மாயத்திற் சிக்குண்டு மயங்கினீர். இவனைக் கொல்லாது தப்பவிடின் தீங்கு நேரும். அன்றியும் மன்னனும் நம்மை வருத்துவன். ஆதலால், உள்வதுரைத்தேன் உரியதொன்றைத் துணிந்து செய்மின்" என்ற பொழுது, அவருட் கொலைக்கஞ்சான் ஒரு பாவி வாளினை வீசிடக் குருதி குதித்து எங்கும் பரக்க நிலமகள் நெடுந்துயர்கூரக் கோவலன் வெட்டுண்டு விழுந்தான். அந்தோ! ஊழ்வினை உருத்துவந்தடைந்த பரிசென்னே!!

இவன் செய்தி இவ்வாறாக, இடைச்சேரியில் கண்ணகியிருந்த இடத்தில் உற்பாதங்கள் நிகழ்ந்தன. அதன்பொருட்டு மாதரி என்பவள் ஆயர்பாடியில் ஆய்ச்சியரோடு தானும் கை கோத்து வட்டமாகநின்று,

"பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன
கண்ணே"

என மாயவன் சீரினை முல்லைப்பண்ணாற் பாடிக் குரவைக்கூத்து நிகழ்த்தி வையையில் நீராடச் சென்றிருந்தாள்.

அங்ஙனம் சென்றிருக்குமளவில், கோவலனைக் குறித்து நகரிற் பிறந்ததோர் வார்த்தை கேட்டு விரைவொடு சேரிவந்தா ளொருத்தி, நீராடிவந்துநின்ற ஆயர்மகளிர்க்கு மறைபிற்கூறிக் கண்ணகியின் அழகும் இளமையும் தனிமையுங்கண்டு ஆற்று ளாய்ச் சொல்லுதற்கு நாவெழாது நெஞ்சமழிந்து விம்முற்று நிற்கையில், கண்ணகி, ஐயையைநோக்கித் "தோழீ; 'யான் விரைவில் வருகுவேன் நீ ஆற்றியிரு, எனத் தேற்றிச்சென்ற என் காதலனை இன்னும் வரக்கண்டிலேன்; காணுமையால் நெஞ்சங்கலங்கித் துன்பநோய் மிகாநின்றது; அதுவேயுமன்றி உலையிலூதும் துருத்திமூக்கும் தோற்க மூச்சும் அழல்போல உயிராநின்றன. இவை இங்ஙனமாக இவ்வாய்ச்சியர் என்னை நோக்கிக் குறிப்பாற்கூறுகின்றது யாதோ அறிகிலேன்"

"தோழீ! நன்பகற்கண்ணே நடுக்கஞ்செய்விக்கும் நோய் ஒருகாலைக்கொருகால் மிகாநின்றது; அதுவுமன்றி என்னால் அன்பு செய்யப்பட்ட கணவன் இன்னும் வரக்காண்கிலேன்; அதனால் பலபடக்கவன்று என் நெஞ்சம் பேதுறுகின்றது; இஃது இங்ஙனமாகவும் இம்மகளிர்பலரும் குறிப்பாற் கூறுவது இன்னதென அறிகின்றிலேன்."

"தோழீ! என்செய்குவேன்; இம்மகளிர் வெளிப்படக் கூறாது மறையிற் பேசுகின்றனரே; அதற்கேற்ப என்னுயிர் நாயகன் இன்னும் வரக்கண்டிலேன்; அதனால் என்நெஞ்சம் மயங்கி அஞ்சுகின்றது; வலத்தோளும் புருவமும் துடிக்கின்ற னவே; இங்கு எனக்குத் துணையாவார் எவருமிலை; இவை இங்ஙன மாக இவர் குறிப்பாற் சொல்லுகின்றது யாதோ தெரிந்திலேன்" என்று இரங்கினள். சொல்லாடமாட்டாது வருந்திநின்ற அம் மங்கை, கண்ணகியின் துயருறு நிலைமைக்காற்றாளாய், இனி உற்றதை உரையாதிருத்தல் தகாதெனினும், கொன்றார்களென் பனேல் இவள் இறந்துபடவும் கூடுமெனக்கருதி, 'மன்னனது உவளகத்திருந்த் சிலம்பு கவர்ந்த கள்வனென்ன நின்கணவனைக் காவலாளர் கொலைசெயக் குறித்தனர்' என்றனள்.

கேட்டவுடனே, தன்னந்தனியேயிருந்து நவித்த பெண் மயில் போல்வாள் என் செய்வாள்! தன்னைமறந்தாள்; பின்புத் தெளிந்தாள்; எழுந்தாள்; விண்ணின்று வழுக்கிய மின்கொடி, புயலொடு மண்மிசை வீழ்ந்தது போலக் கூந்தல்குலைய நில மிசை வீழ்ந்தனள்! விழுந்தவள், எழுந்து கண்கள் கலங்கிச் சிவக்குமாறு கையால் மோதிக்கொண்டனள்; காலையில் தலைபளி செய்துசென்ற உயிரினும்சிறந்தோய்! எங்குற்றனை! எங்குற்றனை! என்று வருந்தி மருண்டழுதனள்.

அங்ஙனம் அழுதவள், "இக்குரவைக்கூத்துள் வந்து ஈண் டிய மகளிர் எல்லீருங்கேண்மின்! என் கணவன் தீமை ஒன்றும் அறிந்திடாத வாய்மையர் என்பதை நாடாமையால், மன்பதை யுலகம் பழிதூற்றப்பாண்டியன் தவறிழைப்ப அதனால் அன்பனை இழந்தேனாகிய யான், தம் கணவர் எரியின்மூழ்க அவரொடு அதனிடை மூழ்காது, கைம்மை நோன்பு நோற்று இடர்ப்படும் பெண்டிருள் ஒருத்தியோ சொல்லுங்கள்" "கோல் கோடிய பாண்டியன் தவறிழைப்பக் கண்டிருந்த அறக்கடவுள் என்னும் அறிவற்றோய்! தமதன்பன் நெருப்பின் மூழ்க அவனையிழந்து நீர்த்துறையிற்படிந்தாடித் துயருற்றிருந்து அழுகின்ற மகளிர் போல வருந்தியிருந்து அழுவாள் ஒருத்தியோ யான் கூறுக" "செம்மையினீங்கிய தென்னவன் தவறுசெய்ய, அதனால் அன் புடைக்கணவன் அழலிடைமூழ்கத் தாமும் அவ்வெரியிடை மூழ்கிடாது, கைம்மை நோன்பு நோற்று வருந்தும் மடந்தை யர்போல, இம்மையிற் புகழும் மறுமையில் நல்லறமும் கை விட்டு இங்கிருந்து மிக வருந்தி அழுவாள் ஒருத்தியோ யான் பகருமின்" என்று அழுதரற்றியவள், கதிரவனை நோக்கிச், செங் கதிர்ச்செல்வனே! "உலகின்கண்ணாகிய நீ கண்டறியாதொன் றில்லை, ஆதலால் நீ அறிய என் கணவன் கள்வனோ உள்ளவாறு உரைத்திடுவாய்" என்று கேட்க, "அவன் கள்வனல்லன், அவனை கள்வன் என்ற இவ்வூரை எரியுண்ணும்" என அவன்பா லிருந்து ஒரு அசரீரி பிறந்தது.

வெங்கதிரோன், நின்கணவன் கள்வனல்லன், என்னவே கண் ணகி மற்றைச் சிலம்பொன்றைத் தன் கையில் ஏந்திக் கொண்டு

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும் நீரொழுகு கண்ணும் உடையளாய் ஆயர்பாடியினின்றும் புறப்பட்டுக் கூடன்மா நகருட் போனவள், அங்குள்ள கற்புடை மகளிரை நோக்கி "அரசன் முறைசெயின் மகளிர் கற்பு மேம்படும். இல்லையாயின் கற்புச்சிறவாது இதனை அறிந்துவைத்தும் கொடுங்கோன் மற மன்னன் நாட்டிலிருந்து வாழுகின்ற கற்புடை பெண்டீர்காள்! கேளுங்கள்; என் கையகத்துள்ள இச்சிலம்பு, என் கணவனைக் கள்வனுக்கி அரசன் கைக்கொண்ட அச்சிலம்பிற்கு இணைச் சிலம்பு பாருமின். உலகில் பிறந்தாருள் ஒருவரும் படாதபாடு பட்டேன்; உறாத பெருந்துயரமும் உற்றேன். என் கணவன் கள்வனல்லன்; பாண்டியனே என்றால் அரசன்; ஒரு வணிகன் மனைவியாகிய எனது காற்சிலம்பினை விலைப்பொருள் தாராமற் கைக்கொள்வது காரணமாக என்கணவனைக் கள்வனென்று பெயரிட்டுக் கொலைபுரிந்தனனே! இம்முறைக்கேடிருந்தபடி என்னென்பேன்! கற்புடையமகளிர்க்கெதிரில் என் கணவனைப்பண்டுபோற் காண்பேனே; அங்ஙனம் காணப்பெறின் அவன் வாயின் நல்லுரை கேட்பேனே; கேட்பேனுகில், கதிரவனைச்சான்று காட்டிய தன்றி இறந்து பட்ட என் கணவன் எழுந்திருந்து வார்த்தை சொல்லக் கேட்பதும் எனக்கு ஒருறுதியாகு மன்றோ? அங்ஙனம் அவன்வாயிற் சொல்லைக் கேளேனுயின், நும்மை இகழ்ந்திட்டஎன்னைக்கள்வன்மனைவியென்றுஇகழுமின்" என்றுரைத்து ஆற்றாதழுகின்றாளை மதுரைநகரின் மகளிரெல்லோரும் கண்டு தேற்றும்வழி காணாராய்த் தாமும் வருந்திஅழுது, "இறக்குமளவும் ஒழியாத துன்பத்தை இக்காரிகைக் குண்டாக்கி அதனால் ஒருகாலும் வளைதலுறாத செங்கோலும் வளைதலுற்றது. இதனால் இனி யாதுவிளையுங்கொல்லோ! அரசியல் அழிந்தது. தண்ணளிசெய்யும் வெண்குடையும் வெம்மையை விளைத்தது. மேல் விளைவது யாதோ அறிந்திலேம். நாம் கண்டு பாராட்டச் சிலம்பொன்று கையிலேந்திக் கற்பின் பெருந்தெய்வம் ஈண்டுற்றது. இனி விளைவதென்கொலோ! தெய்வமுற்ற தன்மையளாய் விம்மி விம்மி வாய்விட்டாற்றுகின்றாள். ஏழை யழுத கண்ணீர் கூரியவாளெர்க்குமாதலால், இனிமன்னவற்கு ஏன்னவிளையுமோ! என்றிரங்கிடும்பொழுது இன்னவள் நிலைமைக்கு வருந்தி, மன்

ன்வன் தன்மைகண்டு ஏங்கி கோல் கோடினமைக்கு அன்னவனைப்பழிதூற்றும் அந்நகரமக்கள், கொலைக்களத்துப்பட்ட கோவலனைக் கொண்டுகாட்டக், கண்ட கண்ணகி, தன்னைக்காணு தவளாகிப் பின்னர் வாய்விட்டரற்ற அந்நகர முழுவதும் ஒல்லென்னும் ஓசையுடையதாயிற்று.

"காலைப்போழ்தில், ஆயர்பாடியில் அருகேவருகி என்றழைத்து ஆகமுறத்தழுவிக் குஞ்சியிலிருந்த கண்ணியை வாங்கி என் கூந்தலில் அணிந்து, யான் வருமளவும் ஆற்றியிருவெனத் தேற்றிச் சென்ற எனது ஆருயிர்க்காதல! இம்மாலைப் பொழுதில் நுமது பொன்போலுமேனி புண்ணீர் சோரப் பொடியாட மண்மிசைக்கிடப்பதே! எனது துயரமிக்க தனிமைகண்டும், இவள் இடருறுவளென்று எண்ணுகின்றிலிர்; வாய்திறந்து ஒரு மாற்றமும் உரைத்திலீர்; தீவினையேனை நோக்கலாகாதென்றோ நும் கண்ணும் திறந்திலது! தழுவியகையும் முன்னைபிற்போல என் எதிர்வந்ிலவே! மாலைத்திரளின் மூழ்கும்நும் திருமார்பம் வெறுநிலத்தே கிடப்பதே! தீயிடைக்கிடந்த மஞ்சுபோலக் குஞ்சிகுலைந்து செந்நீரின் மூழ்கினவே; மன்னனாற் செய்யப்பட்ட இக்கொலை இப்பெற்றியான் முடிந்ததென யானோ அறிந்திலேன்; பாரிலுள்ளோர் பழிதூற்றுதற்கிடமாய்ப் பாண்டியன் தவறிழைப்ப வெட்டுவிப்பதோர் தீவினைகாண் இதுவென்று இந்நாட்டிலுள்ளவர் சொல்வார்களே! அந்தோ! அதற்கு யாது செய்வேன்; கூரியவாளால் என் கொழுநனைக் கொலைபுரிதலாற் கோல் கோடிய மன்னனுடைய இக்கூடன்மாநகருள் தம்மைக் கொண்ட கொழுநர் குறைபுற்றால் அவரைத் தாங்கும் பெண்டிரும் இல்லைகொல்; ஈன்ற குழவியை எடுத்துவளர்க்கும் சான்றோரும் உண்டுகொல்; தெய்வந்தானும் இல்லையோ; உண்டாயின் இம்முறைத்தவறு நேர்ந்திராது; நேர்ந்திருத்தலின் இம்மூவரும் இல்லை" என்று இன்னன சொல்லி அழுகின்றவள் தன் கணவனது பொன் துஞ்சும் மார்பம் தன்மார்பொடு பொருந்தும்படி தழுவிக்கொண்டஅளவில் எழுந்துநின்ற கோவலன், 'பெண்ணருங்கலமே; என்னே! நின் நிறைமதிபோலும் வாண் முகம் கன்றியது?' எனச்சொல்லித் தன்கையால் கண்ணீரை

மாற்றினன். மாற்றியபின்பு கண்ணகி ஏங்கியழுது நிலத்தின் கண் வீழ்ந்து அவனது அடியினைத்தனது இருகையாலும் பற்றி வணங்கிட, 'மையுண்கண் மாதராய்! நீ இங்கிருக்க' என்றுரைத் திட்டுப் பல்லமரர் குழாத்தொடும் விண்ணுலகம் போயினன் கோவலன்.

இந்நிகழ்ச்சியைக்கண்டகண்ணகி, "இங்ஙனம் என்கணவன் எழுந்துநின்றது மாயமோ? அஃதன்றாயின், இருதுணிபட்ட உடல்கூடி ஓருயிர்பெற்று நின்றமையின், என்மனத்தை மருட் டியதோர் தெய்வமோ? ஒன்றையும் தெளிந்திலேன்; ஆதலால் எங்கும் போய்நாடி என்கணவனைக் கூடுவேன்; அங்ஙனம் கூடுதல் எளிதெனினும் என் கடுஞ்சினம் தணிந்தன்றி அவனைக் கூடேன். இச்சினம் தணிவதற்கு அத்தீயவேந்தனைச் சென்றுகண்டு என் கணவனைக்கொன்ற தீத்திறம் யாதென்று கேட்பேன்" எனத் தன்னெஞ்சோடுரைத்துப் போதற் கெழுந்தவள், தன்னூரிற் கண்ட தீக்கனவை நின்று நினைந்து நெடுங்கயற்கண் நீர்சோரச் சென்று, அரசன் கோயில்வாயிலை அடைந்து, "வாயிலோய்! அறிவும் பொறியும் அற்று முறைதவறிய, மன்னவன் வாயி லோய்! இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள் கணவனையிழந் தவள் நின்கடையகத்தாள் என்றறிவிப்பாயே அறிவிப்பாயே" எனக் கேட்ட அவ்வாயிலோன் அரசிருக்கை மன்றம் அணுகி, 'வாழி எங்கொற்கைவேந்தே! கணவனை இழந்தாளொருத்தி கடுஞ்சினத்தளாய்க் கையிற் சிலம்பொன்றேந்தி நின் வாயிலில் வந்துள்ளாள்' என்று பணிந்தனன்.

"அவளை ஈண்டுத் தருக" என, அவைக்களத் தடைந்த கண்ணகியை, "நீரொழுகு கண்ணோடு என்முன்னர் வந்து நிற்கும் மடக்கொடி! நீயார்" என்றனன் மாறன்.

"தேராமன்ன! செப்புவன்கேள்; தன்னையடைக்கலம்புக்க குறுநடைப்புறவின் துன்புகண்டிரங்கித் துலையிலேறிய தோன் றலும், கன்றிழந்த இளம்பசுவின் புன்கணை அஞ்சித் தன்மகனைத் தேரூர்ந்து முறைகண்ட முன்னோனும் ஆண்டிருந்த புகார்த் தொன்னகரம் என் ஊராகும். அவ்வூர்ப் பெருங்குடி வணிகன்

மகனாகி, ஊழ்வினை துரப்ப நின்னகர்ப்புகுந்து, என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்னால் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி யான், கண்ணகி என்பது என் பெயர்" என்றனள்.

பெண்ணணங்கே! "தீக்கொளுவுவார் நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார், பிறனில் விழைவார் என்றிவரைக் கண்ணோடாது கொலைபுரிதல் வேண்டும். கொல்லாவழிப் புற்களைக் களைசூழும் பைங்கூழ் போல நலிவுபல எய்தி உலகு இடர்ப்படும். நல்லோரைக்காப்பதும் தீயோரை அழிப்பதும் அறமன்றோ? ஆதலால் கள்வனாகிய நின்கணவனைக் கொலைசெய்தது கடுங்கோலாகாது" என்றனன் வேந்தன்.

"அரசே! ஒருவன் ஒரு குற்றஞ் செய்யின் அதனை முன்னர் நாடிப் பின்னர் அமைச்சரோடும் ஆராய்ந்தும் ஏற்றவாறு முறை செய்வது மன்னவர்க்கடுத்தது. சொல்வன்மையால் பொய் மெய்யாதலும், சொலமாட்டாமையால் மெய் பொய்யாதலும் இயற்கை. அதனால் குற்றம் அறிவரிதென்றஞ்சுவதன்றோ செங்கோன்மையாகும். மூவர்சொற்கொண்டு முறைப்பட நாடி மெய்ம்மைதேறும் விதமும் தேர்ந்திலை என்பேனேல் 'நீயுரைப்பாய்': கையிற்புண்ணுக்குக் கண்ணாடி ஏன்? கவர்ந்த பொருள் கையகத்திருக்கவும், அதனைச்செய்த பொற்கொல்லன், தேவி காற்சிலம்புக்கிணைச்சிலம்பு இதுவே எனச் சான்றுபகரவும், வேறு என்னை ஆராய்தல் வேண்டும்? என்பை: அதுவாயின், கள்வன் கையகப்பட்ட சிலம்பினை உவளகத்திருந்த சிலம்போடு ஒப்புநோக்கினன்றோ பொற்கொல்லன் புகன்ற புன்மொழி புலனாயிருக்கும். அதனைச் செய்தனையோ? இல்லையே. நற்றிறந் தேராக் கொற்கைவேந்தே! ஆராய்வின்றிக் காரியம்புரிந்து அரும்பழி பூண்டனை! அதனை இன்னே காட்டுவேன், நின்தேவி காற்சிலம்பின் உள்ளிடுபரல் யாது?" என்றனள் கண்ணகி. "தேமொழி! என்மனையாள் காற்சிலம்பினுட்பரல் முத்தென்றான்" பாண்டியன் "என் காற் பொற்சிலம்புட் பரல்மாணிக்கம்" என்றனள் கண்ணகி. உடனே மன்னவன் உண்மை தேறவேண்டிக்

கோவலனிடமிருந்து கிடைத்த சிலம்பைக் கொண்டுவரச்செய்து எதிரே வைக்க, கண்ணகி அதனை உடைத்தனள்; அதினின்றும் மாணிக்கம் தெறிப்பக்கண்ட செழியன், உள்ளம் நடுங்கி "பொன் செய் கொல்லன் தன் சொற்கேட்ட யானோ அரசன்? யானே கள்வன். மன்பதைகாக்கும் தென்புலங் காவல் என்முற் பிழைத்தது. இனி என் ஆயுள்கெடுக" என்றிரங்கி மயங்கி அரியணையில் வீழ்ந்து அப்பொழுதே இறந்தனன்.

இனி யாது விளையுமோ என உள்ளங்குலைந்து உடல்நடுங்கித் "தந்தை தாயரை இழந்தோர்க்கு இவர் உன் தந்தை; அவர் உன் தாய் என்று சொல்லிக்காட்டலாம்; கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தென்னுண்டு' என்று இணையடியில் தொழுது வீழ்ந்து, அல்லவை செய்தார்க்கு அறமே கூற்றமாக நின்று ஒறுக்குமென்பர்; என் கணவனளவில் அஃது உண்மையாக முடிந்தது.

'மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலுங்
கையிற் றனிச்சிலம்புங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொற்செவியி
லுண்டளவே தோற்றா னுயிர்'

என்றுரைத்து வருந்திய பாண்டியன் மனையாளைப்பார்த்து, "கோவேந்தன் தேவி! கேள்: யானோ யாதும் அறியாத இயல்பினேன். முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும். முன்னாளில் தன்னை இகழ்ந்துரைத்த மாற்றவள் பொருட்டு வன்னி மரத்தையும் மடைப்பள்ளியையும் சான்றாக அழைத்துக்காட்டியதையனும், புதுப்புனல் விழாவில் காதலனைக்காவிரி வவ்விச்சென்றிட, அஃது ஓடும் வழியெல்லாம் பின் சென்று அரற்றிடக், கடல் முன்னிறுத்திக்காட்ட, அவனைத்தழுவிக்கொண்ட மொய்குழலும், கலத்திற் சென்ற கணவன் வருமளவும் கடற்கரையிற் கலங்களை நோக்கிக் கல்லுருவமாகி நின்று அவன் வந்தபின்னர் நல்லுருவமேவிய நங்கையும், பொன்னியாற்றில் வண்டலாட்டயர்கையில் இழைத்த மணற்பாவையை 'இவன் நின் கணவன்'

எனக்கேட்டுத், திரைவந்து அதனை அழியாது சூழ்போக, அத னருகே அசைவற்று நின்றிட்ட அரிவையும், அயலானொருவன் விடாமல் நோக்கப் பொருளாய்த் தன் முகத்தைக் குரக்குமுக மாக்கி, வேற்றுநாடு சென்றிருந்த கொழுநன் வரவே குரக்குமுக நீத்த கோதையும் போல்வார் பிறந்த நன்னகரிற் பிறந்தேன்; யானும் ஒரு பத்தினி என்பது மெய்யாகில் இந்நகரை இனி திருக்க ஒட்டேன்; மன்னனை அழித்தது போல மதுரையையும் ஒழிப்பேன்; யான் உரைப்பது பட்டாங்கென்பதும் படிற்றுரை என்பதும் இனிக்காண்'' என வஞ்சினங்கூறி அரமனையை விட் டகன்று அரசமறுகை அடைந்து "இந் நான்மாடக்கூடலில் வாழும் மகளிரும் மைந்தரும் வானவரும் மாதவரும் கேளுமின்! யான் விரும்பும் காதலனைத் தவறிழைத்த இக்கோநகரைச் சீறி னேன். என்பாற் சிறிதும்குற்றமில்லை'' எனக்கூறி, இடதுகொங் கையை வலதுகையாற்றிருகி எடுத்து, மதுரையை மும்முறை வலம்வந்து, சுழற்றி நகர்மீது எறிந்தனள்.

அப்பொழுது, நீலநிறமும் செக்கர்வார் சடையும் பால்புரை வெள்ளெயிறும் வாய்ந்த பார்ப்பனக் கோலத்துடன் அங்கி வானவன் எதிர்வந்து "மாபத்தினி! உனக்குத்தவறிழைத்த அந் நாளில் இந்நகரை எரியூட்ட முன்னரே ஏவல்பெற்றுள்ளேன்; யாரை விடுத்திட்டு எவரை அழித்தல்வேண்டும்'' என்று வினவ, "பார்ப்பார் அறவோர் பசுபத்தினிப்பெண்டிர்-மூத்தோர் குழவி எனும் இவரைக்கைவிட்டுத்-தீத்திறத்தார் பக்கமேசேர்க'' எனக் கண்ணகி ஏவியஉடனே கொடுந்தழல்மண்டிக் கூடனகரைப் பற்றியது.

அரசன், தேவி தன்னுடன் அரசுகட்டிலில் துஞ்சியபின், புகைப்படலம் சூழ்ந்துகொள்ள அனல் கொழுந்துவிட்டெரிந்து கோமகன் கோயிற்கொற்றவாயிலைப் பற்றியவுடனே, கோட்டை வாயிலைக்காவல்செய்துநின்ற வருணபூதங்கள் நான்கும்பெயர்ந்து சென்றன. மாடமாளிகையும் கூடகோபுரமும் ஆடரங்கமும் அணிமலர்ச்சோலையும்,யானைக்கூடமும், குதிரைப்பந்தியும், தேர் நிலையமும், காலாள்நிரையும் தீக்கிரையாயின. விண்ணோக்கி

எழுந்த புகைப்படலம் நிலங்கடந்த நெடுமுடியண்ணலை ஒப்ப இருந்தது. பொறிகள் போய்விழுதலால் பொய்கையும் வாவியும் உலைபோற்கொதித்தன. மீன்கள் துடிதுடித்து உயிர்துறந்தன. நெருப்பு மேனோக்கிஎழுந்துவீசுதலால் மேகமும்கொதிப்புற்றன. கூலமறுகும் கொடித்தேர்வீதியும் நால்வகைப்பட்ட மரபினர் வாழுந்தெருவும் காண்டவக்கானம் கனலுற்றநாள்போற் கலங்கி மயங்கின. தீ தீ என்னும் பேரொலி எங்கும்பரவிற்று. மக்களை விளிப்பாரும் மங்கையைத்தேடுவாரும் அன்னையென்பாரும் ஐயோவென்பாரும் அப்பா என்றழைப்பாரும் ஆயினர் எங்கும். உள்ளிருந்துவருமுன் வெளியினும்பற்றிட இருதலைக்கொள்ளியின் எறும்பு போலாயினர் சிலர். நீர் தேடி ஓடுவார், வருமுன் வீடுவெந்தமைகண்டு மனம்வெந்து வீழ்வார்சிலர். என் மகனைக் கண்டீரோ என்பார் சிலர், என் னுயிர்போல்வானை எங்கேனும் கண்டதுண்டாயிற் சொல்லுமின் என்பார் சிலர், அந்தோ! என்கணவர் யாதாயினரோ தெரிந்திலேம் என்பார்சிலர். தேடிய பொருளெல்லாம் தீக்கிரையாயினவே என்பார்சிலர். நாளைக்கு நாம் செய்வதென்னென்பார்சிலர். நிற்கவும் நிழலொழிந்தது என் செயவல்லேம் தெய்வமேஎன்பார்சிலர். இங்ஙனம்நகர்முழுவதும் அல்லோல கல்லோலப்பட அந்திவிழாவும் ஆரணவோதையும் செந்தீவேட்டலும் தெய்வம்பராவலும் போய்மடிந்தன.

"எரிந்தன சில்லிடை யிறந்து பூழியாய்
விரிந்தன சில்லிடை வெடித்த சில்லிடை
கரிந்தன சில்லிடை கனலி சூழ்தலாற்
பொரிந்தன சில்லிடை புகைந்த சில்லிடை.

எப்புவ னங்களு மிறைஞ்சு மாநகர்
வெப்புறு கனல்கொள விளிந்து போயதால்
அப்புறம் செஞ்சடை யமலன் மூறலான்
முப்புர மானவை முடிந்த தேயென."

அப்பொழுது, "தோராத மன்னனைச் சிலம்பில் வென்று இவ்வூரைத் தீயூட்டிய இவ்வொருமகள் எந்நாட்டினள்கொல், யார்மகள்கொல்லோ அறிந்திலோம்" எனக் கண்டவர்கூறக்

காதலனை இழந்திட்டநோயால் உள்ளங்கனன்று ஊதுலைக்குருகென உயிர்ப்பு விங்கப், பெருமறுகினும் குறுந்தெருவினும் சுழன்று திரிந்துமயங்கி ஆராத்துயரமுற்றனள் வீரபத்தினி. தழலின் வெம்மைக்காற்றாத மதுரைக்கதிதேவதை, வெண்பிறை சூடிய செஞ்சடையும், குவளையுண்கண்ணும், பவளச்செவ்வாயும், நித்திலத்தைஒத்த நகையும், ஒருபால் நீலமும் மறுபுறம் பொன்மையும்கலந்த வண்ணமேனியும் தாங்கி, வலக்கையில் வாளும் இடக்கையில் தாமரையும்கொண்டு, இடதுகாலிற் சிலம்பும் வலதுகாலிற் கழலும் அணிந்த கோலத்துடன் கண்ணகிக்குப் பின்னின்று, "நங்காய்! யான் ஒரு குறையுடையேன்; நீ அதனைக் கேட்டி" என்றுரைக்க, கண்ணகி திரும்பிப்பார்த்து, "என்பின் நிற்கும் நீ யார்? யானுற்ற துயரத்தினை நீ அறிகுவையோ" என வினவ, "அணியிழாய்! நீயுற்ற எவ்வம் அறிந்தேன்: யான் இக்கூடல் நகரைக்காப்பவன்; என்பெயர் மதுராபதி என்பது. பைந்தொடி! யானும் நின்கணவன்பொருட்டுக் கவற்சியுடையேன். பெண்ணிற் பெருந்தக்காய்! என்நெஞ்சு வருந்திப்புலம்புதற்குற்ற நோயைக்கேள். தோழீ! கோல்திறம்பாத எம் கொற்றவற்கு ஊழ்வினை வந்தடுத்தவாறு கேட்டி. மாதராய்! நின் கணவன் தீதுறுதற்கு நேர்ந்த இவ்வினை ஒன்றினையும் கேட்பாய். இம்மதுரையில் மறையோதினர் வாயின் வார்த்தையைக் கேட்பதல்லது மணிநா ஓசையைக் கேட்டதுமிலன். பகைமன்னர்கள் பழிதூற்றுவதல்லது குடிகள்பழிதூற்றுங் கொடுங்கோலனல்லன் எங்கோமான். நன்னுதன்மடந்தை! இன்னுங்கேள். இந்நகரில் மிடியுடை வாழ்க்கையன் கீரந்தை என்னும் மறையவன் வேற்றூர் செல்வதறிந்த அவன் மனையாள், 'நீர் இல்லாத காலத்து அரணில்லாத மனையில்வாழும் அடியேற்குத் துணையாவார் எவர்' என்று வினவியபோது, 'நங்காய்! அஞ்சற்க, அரசு நினக்கு அரணாகும்' எனமொழிந்துபோயினன். அவ்வார்த்தை, நகரில் நடப்பனவற்றை வேற்றுருக்கொண்டு யாமத்தில் ஒற்றியறிந்து செல்லும் செழியனது செவிப்புலம் புக்கது. அன்றுதொட்டு அவன் மனையைக் குறிக்கொண்டு நோக்கிவருவானாயினன். ஒருநாள் அவ்வீட்டில் உரையாடும் ஒலிகேட்டு ஐயுற்றுப் புகவக்

கதவம்புடைத்துச்சென்றனன் வேம்பன். அச்செய்தியை அந்தணன் அரசவையில் வைகறையிற்சென்று முறையிடக்கேட்டுத் தீமைசெய்தானைப்போல அஞ்சிநடுங்கித் தன்செங்கை குறைத்திட்டவனது விழுக்குடியிற்பிறந்த எம்இறையும் இழுக்கமில்லாத ஒழுக்கத்தினன். நங்கையர்க்கு நாயகமே! இன்னும் கேட்பாய். சோழநாட்டினின்றும் மலைநாடுசென்று மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரன்பாற் பரிசுபெற்றுமீண்ட பராசரன் என்ற அந்தணன் தன்னகர்க்குச் செல்கின்றவன் இந்நாட்டுத் திருத்தங்கால் என்கிறஊரில் அரசுநிற்கும் மன்றின்கண் வந்து தங்கினனாக, அப்பொழுது அந்தணச் சிறார்கள் தன்னைவந்து சூழ்ந்திட, அவர்களைநோக்கி, 'பார்ப்பீர்! என்னோடு மறையோதி இப்பண்டப்பொதியினைக் கொண்டுபோமின்' என, அச்சிறாருள் வார்த்திகன் மகன் தக்கணன் என்போன், தன்னோடொப்ப மறைவிளி வழாது ஓதக்கேட்டு வியந்து, புனைவனவும் பூண்பனவுமாகிய நன்கலன்கள் பலவும் அவற்கு நல்கித் தன்னூர்க்குச் சென்றனன் பராசரன். அவற்றைத் தக்கணன் அணியக்கண்ட கோத்தொழிலிளையவர் இவற்றைஇவனே வௌவினோனென்று வார்த்திகனைச் சிறைக்கோட்டத்திட்டனர். அதனைப் பொறாத அவன் மனையாள் கார்த்திகை, கொற்றவை திருமுன்நின்று உற்றதுரைத்து நிலத்தில்வீழ்ந்து புரண்டு அழுதுஅரற்றினள். அது கண்டு ஐயை கோயிற்கதவம்திறவாதடைத்தது. திறவாதடைத்த செய்தியை மறவேன் மன்னவன் கேட்டுமயங்கிக் 'கொடுங்கோலுண்டுகொல் கொற்றவைக்குற்ற இடும்பை யாது தேர்மின் என்றபொழுது, ஏவலிளையவர் காவலனைத்தொழுது வார்த்திகன் செய்தியை உரைப்ப, நீவிர்செய்தது நீர்மையன்றெனவெறுத்துக் கூறி அவனைச் சிறைவீடுசெய்து, 'அறிவிலாப் புன்மாக்களால் இறைமுறை பிழைத்தது; இதனைப்பொறுத்தல் நின்கட'னென நிலமுறவணங்கி, வயலூர், தங்கால் என்னும் இரண்டூர்களையும் வார்த்திகனுக்கு வழங்கினன். உடனே கலையமர் செல்விக் கதவமும் திறந்தது. தேமணங்கமழும் பூங்கோதாய்! இங்ஙனம் கோமுறை திறம்பாத கொற்றவேந்தன் தான் முறைபிழைத்த தகுதியும் தெரிப்பேன்கேள். ஆடித்திங்கள் அமரபக்கத்து அட்

டமியோடு பரணி கார்த்திகை கூடிய வெள்ளிக்கிழமையில் தீயுண்ண மதுரையோடு அரசுகேடுறும் என்னும் உரையுமுண்டு. நிரைதொடி! இன்னும் உரைப்பேன்கேள். கலிங்கநாட்டில் சிங்கபுரத்தில் அரசு புரிந்திருந்த வசு என்பவனும் கலிங்கபுரத்தரசனாகிய குமரனென்பவனும் தம்மிற் பகைமைகொண்டு ஒருவரையொருவர் வெல்லக்கருதியிருந்தனர். அப்பொழுது சிங்கபுரத்தில் ஓர் அங்காடித்தெருவில், கரந்துறைமாக்கள் போலத் தன் காதலிதன்னோடிருந்து அருங்கலம் பகர்ந்திருந்த சங்கமன் என்னும் வணிகனை, அந்நகரத்தரசனிடம் தொழில்செய்திருந்த பரதன் என்பவன், 'இவன் பகைவனுடைய ஒற்றன்' என்று பற்றிக்கொண்டுபோய் மன்னர்க்குக் காட்டிக் கொல்வித்தனன். அச்சங்கமன் மனைவி நீலி என்பவள் நிலைக்களம் காணாளாய், மன்றினும் மறுகினும் சென்று சென்று, வாய்விட்டரற்றிப் பல விடத்தினும் அலைந்துதிரிந்து, பதினான்காம்நாள் ஒரு மலையின் மீதேறித், தன்கணவனை அடைவதற்குத் தனது உயிர்நீப்ப நினைந்தவள், 'எமக்குத் துன்பஞ்செய்தவர் தாமும் இத்துயரம் அடைக' எனச்சூளுரைத்து வீழ்ந்திறந்தனள். அப்பரதனே இக்கோவலனாக வந்து பிறந்தனன். அதனால் துன்பமடைந்தீர்கள். வாரொலிகூந்தல்! வருந்தற்க. இற்றைக்குப் பதினான்காம்நாள் பகற்பொழுதுகழிந்த பின்னர் நீயும் நின்மணமகனை வானோர்வடிவிற் கண்டடைகுவை" என ஊழ்வினை உருத்து வந்த திறத்தினை உரைத்துத்தேற்றி மதுராபதிதெய்வம் சென்ற பின், கண்ணகி 'என் கருத்துறு கணவனைக் கண்டபினல்லது ஓரிடத்தும் நிற்றலுமில்லேன் இருத்தலும் செய்யேன்' என மனங்கொண்டு, கொற்றவை வாயிலில் தன் பொற்றொடியைத் தகர்த்துவிட்டுக் 'கிழக்குத்திசை வாயிலில் அன்று கணவனோடு புகுந்தேன்; இன்று மேற்றிசை வாயிலில் வறிதுசெல்கின்றேன்' என மனமழுங்கி வையைக்கரைவழியே மேடென்றும் பள்ளமென்றும் பாராமல் இரவும் பகலும் அறியாது நடந்து மலைநாட்டையடைந்து, அங்குள்ளகுன்றமெறிந்த குமரவேள்மேவிய திருச்செங்கோடென்னும்மலையின்மீது அடிவைத்தேறிவேங்கை மரத்தின் நிழலின்கண் நின்றிடப் பதினான்காம் நாள் பகற்

பொழுது கழியும் நேரத்தில், குன்றில் வாழும் குறவர் மகளிர் வந்தீண்டி, 'மலை வேங்கை நறுநிழலில் வள்ளிபோல வந்து நின்றீர் நீர்யாவிரோ?' என்று வினவிட, 'நங்கையீர்! மதுரையும் அரசும் கேடுற வல்வினையாற் கணவனை இழந்து போந்த கடுவினையேன் யான்' என முனிவுசிறிதுமின்றி உரைக்குமுன், அவர்கள் அஞ்சி இணைவளைக்கை எதிர்கூப்பி இறைஞ்சிநிற்குமளவில் வானவர்கள்வந்து இவள்பெயரை மந்திரமாகச்சொல்லி மலர்தூவி ஏத்தி மலர்மாரிபெய்ய தேவவடிவாகப்போந்த கோவலனைக்கண்டு மகிழ்ந்து அவனுடன் வானவூர்தி ஏறி விண்ணகமாதர்க்கு விருந்தாயினள் கண்ணகியாகிய வீரபத்தினி.

இவ்வாறு, வேங்கைநிழற்கீழ் நின்ற கண்ணகி, வானவர் வடிவிற்போந்த கோவலனுடன் தேவர்கள் பூமழைபொழிய வலவனேவாத வானவூர்தியிலேறிச் செல்வதைக்கண்கூடாகக் கண்ட குன்றவாணர்கள், பெருவியப்படைந்து 'இவள் நங்கள் குடிக்கோர்தெய்வம்' எனக்கூறித், தொண்டகம்தொட்டுச் சிறுபறை முழக்கிக், கோடுவாய்வைத்துக்கொடுமணிஇயக்கிக்,குறிஞ்சிபாடி நறும்புகை எடுத்து, விரவுமலர் தூவி வழிபட்டுக் குரவையயர்ந்த பின்னர், மலைவளங்காணுதல்வேண்டிப் பேராற்றங்கரைக்கண் தங்கியிருந்த சேரன் செங்குட்டுவன்பால் கையுறை பலவுடன் சென்று வணங்கி இதனை எடுத்தியம்பினர்.

அவனும் எல்லையில்லாத இறும்பூதுடன், தன்னருகிருந்த பெருந்தேவியை நோக்கி, "நன்னுதால்! இந்நங்கையின் கற்பின் திறத்தினை என்னுரைப்பேன்? இவ்வாறு உயிருடன் வானகம் சென்ற இவளினும் நலஞ்சிறந்தவர் எவருளர்?" என்றெடுத்துப் புகழக்கேட்ட தேவியும், "இவள் வானில் திருவுறுக; அது கூற வேண்டா; நம் நாட்டடைந்த இப்பத்தினிக் கடவுளை நாம் பராவுதல்வேண்டுமென்று சொல்ல, அதற்கிசைந்த செங்குட்டுவன் பத்தினிக்கோட்டம் வகுத்து, இமயச்சிலை கொணர்ந்து செதுக்கிய கண்ணகியின் படிமத்தினை அதன்கண் எழுந்தருளிவித்து, வேள்வியும் விழாவும் நாடொறும் நடத்தி, வளம்பல பெற்று மகிழ்ந்திருந்தனன். அஃதறிந்து, கொற்கையிலிருந்த இளஞ்

செழியனும், இலங்கையிற் கயவாகுவும், சோழநாட்டில் உறையூர்க்கணிருந்த பெருநற்கிள்ளியும் தத்தம் நகரிற் கண்ணகியின் பொருட்டு ஆலயம் எடுப்பித்து அவள் திருமேனியினை எழுந்தருளச்செய்து சிறப்பொடுபூசனை விருப்பொடுவகுத்து வழிபட்டு நாடுசெழிக்க நலம்பெற்று இனிது வாழ்வாராயினர்.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணமாற்—றெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து.

உ

தமிழ்த்தாய்வாழ்க.

தமிழர் வீரம்.

(முற்றொடர்ச்சி)

சாமி. சிதம்பரன் எழுதியது.

பாண்டியன் தலையாலங்கத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் என்பவன் ஒரு சிறந்த வீரன். ஆதலால் அவனிடம் அணுகி அவன் வீரத்தின் தன்மையை யறிவோம். இவன் இளைஞனாக விருக்கும் போதே, **தலையாலங்கானம்** என்னுமூரில், **கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை** என்னும் மன்னனுடன் பொருது அவனைச் சிறைக் கோட்டத்திற் புகுத்தினன். இவன் தமிழ்க்கல்வியிற் றேர்ந்தவனாகவும் தானே செய்யுளியற்றும் ஆற்ற லுடையவனாகவுமிருந்தான். இவன், **எழினி, எருமையூரன், பொருநன், இருங்கோவேண்மான்** முதலிய வீரர்களுடன் போர் செய்து வெற்றி பெற்றான். வீரத்தினாலும் அறத்தினாலும் சிறந்து விளங்கினன். இவனைக் **கல்லாடனார், இடைக்குன்றூர் கிழார், மாங்குடி கிழார், குடபுலவியனார்**, முதலியபுலவர்கள் பாடியிருக்கின்றனர்.

அவர்கள் பாடல்களை யாராய்ந்தால் இவன் வரலாறு முழுவதை யுங் காணலாம். இவன் வீரத்தை விளக்க இவனாற் கூறப்பட்ட ஒரு பாட்டே போதுமானதாதலின் அதனைக் கூறி நிறுத்துகின் றேன்.

'புல்லிய சொற்களைக் கூறிய சீற்ற மிக்க எமது பகை மன் னர்களை அரிய போரில் சிதறும்படி பொருது முரசத்துடன் கைக்கொள்வேன்; அவ்வாறு கைப்பெறேனாயின், எனது குடைநிழலில் வாழ்கின்ற குடிமக்கள், தாங்கள் சென்றடையும் நல்ல நிழலைக் காணாதவர்களாய், எமது அரசன் மிகவுங் கொடி யன் என்று கூறிக் கண்ணீர் சொரிந்து பழி தூற்றும் கொடுங் கோலை யுடையவனாவேன்; அன்றியும் மிகுந்த சிறப்பையும், உயர்வான கல்வி கேள்விகளையு முடைய மாங்குடிமருதன் முத லாக வுள்ள- உலக முள்ளளவும் பலராலும் புகழப்படும் சிறப்பை யுடைய- புலவர்களால் எனதுநாடு பாடப் பெறாததாகுக; அன் றியும் என்னாற் காப்பாற்றப் படுகின்றவர்கள் துன்ப மடையுமாறும், இரக்கின்றவர்களுக்கு இல்லையென்று சொல்லுமாறும் வறு மையை யடைவேன்" என்று கூறியிருக்கின்றான். இதனை:—

சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு,
ஒருங்கு அகப்படேஎன் ஆயின், பொருந்திய
என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது,
"கொடியன் எம்இறை" எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை;
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே

என்ற பாட்டினால் அறியலாம். (புற. நா. 72)

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் என்னும் இம்மன்னவன் தன்னாட்டில் வாழும் குடிகள் நலமடையுமாறு செங்கோல் செலுத்துதலே வீரம் எனக் கருதியிருந்தான். புலவர்களாற் பாடல் பெறாத நாடு வீரமுடைய அரசர்களால் ஆளப்படும் நாடன்றெனக் கருதியிருந்தான். தன்னால் காப்பாற்றப் படுவோரைத் துன்புற விடுதல் வீரத்திற்கு இழிவென வெண்ணியிருந்தான். இரப்போர்க்கு இல்லையென்று சொல்லுதல் வீர மில்லாமைக்கு அறிகுறி யென அறிந்திருந்தான். இவனைப் போன்ற மன்னர்களை இக்காலத்திற் காண இயலுமோ? குடிகள் பழிதூற்றுமாறு அரசாளுதல் அரசாட்சி யன்றெனக் கருதியிருந்த இவன் தன்மையை இக்காலத்தார் நுனித்துணர்வார்களாயின் நமது தமிழரசர்களின் அரசியல் மேன்மை விளங்காமற் போகாது. பத்துப்பாட்டில் உள்ள மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை என்ற பாடல்களுக்கும் இவனே தலைவனென்றால் இவன் வீரத்தை என்னென்று விளம்புவது?

இனி, இளஞ் சேட்சென்னி யென்னும் சோழ மன்னனிடஞ் சென்று அவன் வீரத்தை யறிவோம். இவனுடைய வீரம் எல்லோராலும் மிகவும் பாராட்டற் குரிய தொன்றாகும். இவன் சேரமானுடைய பாழஊரை முற்றுகையிட்டுத் தன் வயப் படுத்திக்கொண்டமையால் சேரமான் பாழஊரெறிந்த இளஞ்சேட் சென்னி என்ற பெயரும் இவனுக்குரியதாகும். அன்றியும், இவன் இரக்கின்றவர்களைப் புரக்கவேண்டுமென்ற கொள்கையை உறுதியாகக் கொண்ட வீரன். இவன் செயலை ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் கூறுவதா லறியலாம்: அவர் இளஞ்சேட் சென்னி யைநோக்கி—

“நீ பகைவர்கள் கோட்டையை அவர்கள் கையிலிருக்கும் போதே பாணர்களாகிய இரவலர்களுக்கு அக்கோட்டை உங்களுடையது எடுத்துக் கொள்ளுங்கள் எனக் கொடுக்கும் வள்ளலாகிய வீரன். எந்தையாகிய நீ! இரவலர்களைப் புரப்பதையேர் கடமையாகக் கொண்டிருக்கின்றாய்” என்று கூறியிருக்கின்றார். இதனை:—

.........நீயே ஒன்னார்
ஆர்எயில் அவர்கட்டு ஆகவும் நுமதுஎனப்
பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்!
பூண்கடன் எந்தை நீ இரவலர் புரவே

என்ற பாடலால் அறியலாம். (பு. நா. 203)

* இங்கே வடநாட்டு வீரனாகிய **இராமனையும்** நமது வீரனாகிய **இளஞ்சேட் சென்னியையும்** ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் தமிழர் வீரத்தின் உயர்வு விளங்கும். **இராமன் சுக்கிரீவனுடன்** நட்புப்பூண்டவுடன் அவனுக்குக் **கிட்கிந்தை** நகரத்தைக் கொடுத்ததாகக்கூறி, பின்னரே **வாலி** யுடன் வஞ்சகப் போர் செய்து, வாலியை வைகுந்தம்பெற வைத்துக் **கிட்கிந்தையைச்** சுக்கிரீவனுக்கு உரிமையாக்குகின்றான். இச்செய்கையால் இராவணனை எதிர்ப்பதற்காக இராமனுக்குப்பெரும் படைத்துணை கிடைத்தது. பின்னர் **இராமன், இராவணன்** உடன்பிறந்த இளைஞனாகிய **விபீடணன்** தன்னிடம்வந்து சரணமடைந்தபோது **இலங்கையைக்** கொடுத்ததாகக்கூறிப் பட்டமும் சூட்டுகின்றான். பிறகு **விபீடணன்** பேருதவியாலேயே அரக்கர் சேனைகளையும் **இராவணனையும்** கொன்று இலங்கையை விபீடணனுக்கு உரிமையாக்குகின்றான். ஆனால் இச்செயல்யாவும் இராவணனாற் கவர்ந்துசென்ற சீதையை மீட்டும் அடைவதற்கே இராமனாற்செய்யப்பட்டனவாகும். ஆகவேஇராமன் வீரச்செயல் தன்னலங்கருதிய வீரச்செயல் என்று கூறுவதிற் குற்றம் யாதுளதென்று எமக்குப் புலப்படவில்லை. நமது தமிழ்வீரனாகிய **இளஞ்சேட்சென்னியோ** பகைஞர் கோட்டைகளை இரவலர்களாகிய பாணர்களுக்குக் கொடுத்துள்ளான். பாணர்களிடமிருந்து மன்னன் பெறக்கூடிய உதவியாதுளது? ஆதலால் நமது **இளஞ்சேட்சென்னியின்** செயல் எதிர்மாறு கருதாப்பெருஞ்செயலன்றோ? இவன் வடநாட்டு **வீரனாகிய இராமனைவிடச்** சிறந்த தமிழ்வீரனாவான் என்பது எமதுகொள்கை.

* தொல்காப்பியம் புறத்திணை இயலில், உழிஞைத் திணையில் கொள்ளார்தேம் குறித்த கொற்றமும் என்னுந் துறையில் நச்சினார்க்கினியர் உரைஎழுதும் போது இளஞ்சேட்சென்னியின் வீரத்தையும் இராமனுடையவீரத்தையும் ஒப்பிட்டுக்கூறியிருக்கிறார். (புறத்திணையியல் 206-207 ஆம்பக்கம் S. பவானந்தம்பிள்ளை பதிப்பு)

இனி, பொற்கொல்லன் சொல்லை நம்பிக் கோவலனைக் கொன்ற பாண்டியன் நெடுஞ்செழியன் உயர்ந்த வீரத்தை உற்று நோக்குவோம். இவன் நடுநிலை வழுவா நல்ல வீரன். கோவலனைக் கொன்றது நடுநிலைமை யன்றென வுணர்ந்தவுடன் உயிர் விட்டுக் கொடுங்கோலான தனது செங்கோலை மீண்டுஞ் செங்கோலாக்குவானாயின் இவன் வீரத்தன்மையை என்னென்று விளம்புவது? இவன் வரலாற்றைச் சிலப்பதிகாரத்தால் நன்கறியலாம். சிலப்பதிகாரத்திற் கூறியவாறு கூறி இவன் வீரத்தை விளக்கி மேலே செல்வாம்.

கண்ணகி, தன்கணவன் வெட்டுண்டிறந்தபின் ஒற்றைச் சிலம்பைக் கையிற்கொண்டு, பாண்டியன் கோயிலை யடைந்து, வாயிற் காவலன் ஒருப்பாட்டைப் பெற்றபின், நீர்வார் கண்ணை யுடையவளாய் மன்னனைக் குறுகினாள். உடனே மன்னன் கண்ணகியை நோக்கி

நீர்வார் கண்ணை! எம்முன் வந்தோய்!
யாரை யோநீ! மடக்கொடியோய்!

என்று கேட்டனன். உடனே கண்ணகி

தேரா மன்னா செப்புவ(து) உடையேன்,
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்,
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே; அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா! நின்னகர் புகுந்(து) ஈங்(கு)
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி,
கண்ணகி என்பது என் பெயரே—

என்று கூறினுள். உடனே மன்னவன்

பெண் அணங்கே!
கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
வெள்வேற் கொற்றங் காண்—

என்று கூறினன். உடனே கண்ணகி—

நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!
என்கால் பொற்சிலம்பு மணியுடை யரியே!

என்ருள். மீண்டும் மன்னவன,

தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி!
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே!

என்று சொல்லி முன்னர்க் கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பைக் கண்ணகி முன் கொணர்ந்து வைக்குமாறுபணித்தான். உடனே ஏவலனொருவன் அங்ஙனமே கொண்டுவந்து வைத்தான். அச்சிலம்பைக் கண்ணகி எடுத்து உடைத்தாள். அச்சிலம்பின் பரலாகிய மணி அரசன் வாயிற்சென்று தெரித்தது. அந்த மணியைக்கண்ட மன்னவன் நடுநடுங்கினன். வெண் கொற்றக்குடை தாழ்ந்துவிட்டது. கையிலிருந்த செங்கோல் நழுவி விழுந்துவிட்டது. மன்னனே-

பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானே அரசன்? யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்-

என்று சொல்லிக்கொண்டு மயங்கி வீழ்ந்து அரியணையிலேயே உயிர்துறந்தான். அறியாமற் செய்த தனது குற்றத்தை யுணர்ந்தவுடன் உயிர்துறந்த இவனைப்போன்ற வேறு வீரர்களை நாம் வரலாறுகளிற் கண்டதுண்டோ? கரவுச்செய்கையாலேயே எதிரிகளைவென்ற வடநாட்டுவீரர்கள் சிலரை இஞ்ஞான்று யாம் கடவுளர் எனப்போற்றுகின்றேம். நம் தமிழகத்திற் பிறந்த உண்மைத் தமிழ் வீரர்கள் பலரிருந்தும் அவர் தம்பெருமையை

அறியாதிருக்கின்றோம். அவர்களைக் கொண்டாடாமலிருக்கின்றோம். நமது முன்னோர்களின் வீரச்செயல்களை யறியாத நாம் பிறநாட்டு வீரர்களை வணங்குவது "தாய் தஞ்சாவூரில் தட்டுப் பிச்சை யெடுக்கின்றாள்; குமரன் கும்பகோணத்தில் கோதானம் கொடுக்கின்றான்" என்ற பழமொழிக்குச் சான்றாயிருக்கின்ற தன்றோ? இவ்வமயத்தில் கண்ணகியின் வீரத்தையும் நோக்குதல் வேண்டும். அதனைப் பின்னர்க்கூறுகின்றேன். இனி இவன் காலத்திருந்த மற்றொரு வீரன் தன்மையைக்காண்போம்.

சேரநாட்டு வஞ்சிமாநகரி லுறைந்து செங்கோல்செலுத்திய **சேரன் செங்குட்டுவன்** என்பான் ஒரு சிறந்தவீரன். இவன் பத்தினிக்கடவுளாகிய கண்ணகியின் வரலாற்றைக் **கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்** வாய்மொழியால் அறிந்தபின் அவளுக்கு உருவச்சிலைசெய்துநட்டுக் கோயிலெடுக்க எண்ணங் கொண்டான். கண்ணகியின் உருவமைப்பதற்குப் பனிவரைக் கல்லேதக்கதென்றறிந்து வடக்குநோக்கிப் படைகளுடன் சென்றான். அதுகாலை, தன்னை எதிர்கொண்டு சிறப்புச்செய்யாத மன்னர்களையெல்லாம் போரில்வென்று திறைகொண்டு, தமிழ் வேந்தர்களை இகழ்ந்த **கனகன், விசயன்** என்னும் மன்னர்களைப்பிடித்துப் பிணைத்து இமையவரைக்கல்லை அவர்கள் தலைமீதுவைத்துக்கங்கையில் நீர்ப்படைசெய்து **வஞ்சிமாநகருக்குக்** கொண்டுவந்தான். இதற்குமுன்னும் ஒருமுறை வடநாட்டின் மீது படையெடுத்துச்சென்று ஆரிய மன்னர்களையெல்லாந் தோற்கச்செய்து வெற்றிபெற்றிருக்கின்றான். கண்ணகியின் உருவச்சிலைசெய்து கோவிலமைத்துத் திருவிழாநடத்துதற்கு முன்னர், வடநாட்டிலிருந்து பிடித்துவந்த **கனகன் விசயன்** என்னும் மன்னர்களையும் சிறையிலடைத்து வைத்திருந்த மற்றைய ஆரிய அரசர்களையும், சிறைவீடு செய்தானென்றால் இவன் வீரத்தையும் பெருந்தன்மையையும் என்னென்று கூறுவது? இம்மன்னன் கண்ணகிக்குக் கல் கொணரும்பொருட்டு வடநாடு நோக்கி யெழும்போது கூறியமொழியே இவனுடைய சிறந்த வீரத்தை வெளிப்படுத்துகின்றது. அதனை

வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவுள் எழுதவோர் கற்கொண் (டு அல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகில்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉம் கோலேன் ஆகுக

(சிலப்பதிகாரம், கால்கோட்காதை)

என்ற சிலப்பதிகாரத்தாற் காண்க.

இனி இவன் பின்னோராகிய **இளங்கோ வடிகள்** என்னும் அரசத்துறவியாகிய புலவர்பெருமான் வீரம் மிகவும் பாராட்டற்குரியதாகும். **சேரன் செங்குட்டுவனும், இளங்கோவும் நெடுஞ்சேரலாதனுடைய** மக்களாவர். ஒருநாள் **நெடுஞ்சேரலாதன்** அத்தாணியில், அரியணைமீது, தனது இருபிள்ளைகளும் இருபாலும் அமர்ந்திருக்க அரசுவீற்றிருந்தான். அவ்வமயம் ஆண்டுற்ற காலக்கணக்கனொருவன் **இளங்கோவையும் செங்குட்டுவனையும்** உற்றுநோக்கி "இளங்கோவுக்கே அரசற்குரிய அழகுகள் அமைந்துள்ளன; அவரே முற்காலத்தில் உலகை ஒருகுடையிலாளும் அரசராவர்". என்று கூறினன். இச்சொற்களைச்செவிமடுத்த **செங்குட்டுவன்** முகம் வாட்டமடைந்தது. அதைக்கண்ணுற்றஇளங்கோ "முத்தோனிருக்க இளையோன் அரியணை யேறி அரசாளுதல் முறையன்று; எனது முன்னவனே இவ்வுலகை ஆளுதற்கு உரியவனாகட்டும்; யான் மேலுலகாளும் நெறியிற் செல்லுகின்றேன்" என்றுகூறி உடனே துறவறத்தை மேற்கொண்டார். அதுமுதல் அவரை அனைவரும் **இளங்கோ வடிகள்** என அழைக்கலாயினர். இவர் இளம்பிள்ளையாயிருக்கும் போதே இச் செயலைச்செய்யத் துணிந்தது தமிழர் வீரம் அன்றோ? துறவறத்தை மேற்கொண்ட நமது **இளங்கோவடிகள்,** இக்காலத்திலுறையும் மொட்டைத்தலைத் துறவிகள் போலவும், மயிர்த்தலைத் துறவிகள் போலவும், சடைத்தலைத்துறவிகள் போலவும், காவித்துணித்துறவிகள் போலவும், கண்டிகையும் நீறுமணிந்து உலகினரை ஏமாற்றும் துறவிகள்போலவும், சோம்பேறியாகவும், தந்நலங்கருதுவோராகவும் இருந்தாரிலர். இவர்

நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரம் என்றோர் மணி-
ஆரம் படைத்த தமிழ் நாடு

என்று ஒரு சிறந்த நாட்டுத் தொண்டரால் பாராட்டப் பட்டதும், உலகத்தா ரனைவரும் புகழத் தகுவது மாகிய **சிலப்பதிகார** மென்னும் செந்தமிழ் நூலை ஆக்கி யளித்திருக் கின்றார். உலகத் தொண்டர் என்று உரைக்கத் தகுந்தவர் இவரன்றோ? எல்லா நலங்களையும் எய்தத் தக்க அரசியலை அகற்றித் துறவறத்தை மேற்கொண்ட இவர்தம் தமிழ் வீரத் னதைப் பாராட்ட வேண்டுமன்றோ?

உண்மைப் பெயரை உணர முடியாத பண்டைக் காலத்துச் சோழ மன்னவன் ஒருவன் வீரத்தின் உயர்வை நோக்குவோம். **புகார்** நகரில் அரசு செய்த சோழ மன்னன்றன் அருமை மகன் ஒருநாள் தேரேறித் தெரு வழியே சென்றான். அப்பொழுது ஒரு பசுங்கன்று விரைந்தோடி வந்து தேர்க்காலில் வீழ்ந் திறந்தது. இந்நிகழ்ச்சியைச் சோழ மன்னவ னறிந்தால் மகனைக் கொன்று விடுவான் என்றெண்ணி அமைச்சர் முதலிய சான் றோர்கள், ஒருவரும் உணராவாறு ஒளித்து விட்டனர். இவ் வாறு பல திங்களோ, பல ஆண்டுகளோ சென்றன. பின்னர் அரசன் எவ்வாறோ இந்நிகழ்ச்சியை அறிந்து கொண்டான். உடனே நாட்கள் கடந்து போயின வென்று எண்ணுமலும், அறத்தையே நிலை நிறுத்த வேண்டுமென்று எண்ணியும், தனது அரசாட்சியில் பசுங் கன்று கொல்லப்பட்ட மறம் நீங்க வும் தன் மகனைத் தேர்க்காலிற் கிடத்தி அவனைக் கொன்று அறத்தை நிலைநிறுத்தினன். இவ்வரலாற்றை

சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலை கழிந்ததன் பின்றையும்—மேலைக்
கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை யில்.

என்று பழமொழி யென்னும் சிறந்த சங்க நூலிற் கூறி யதா லறியலாம். இச்சோழன் பெயரைப் பிற்காலத்தினர், **மனுநீதிகண்டசோழன்** எனக் காரணப்பெயர் புனைந்து கூறி

னர். அஃறிணை உயிராகிய பசுங் கன்றைக் கொன்றதற்காக உயர்ந்த மகனுயிரை வாங்குமாறு எந்த மனுநீதியிற் கூறப் படுகின்றது? தன்னுயிர் போலவே மன்னுயிர்களையும் புரக்க வேண்டுமென்னும் உண்மையும் உறுதியுங் கொண்ட இவன் வீரச் செய்கையைச் சிறிது எண்ணிப் பாருங்கள்! இது போன்ற வரலாற்றை வேறு எந்த நாட்டு வரலாறுகளிலேனும் கேட்டிருக் கின்றீர்களா? இந்தகைய வீரன் பிறந்த குடி தமிழ்க் குடி யன்றோ? இவன் வீரம் தமிழர் வீர மன்றோ? இத்தகைய வீரர் களின் வழித் தோன்றல்களாகிய நாம் இஞ்ஞான் றிருக்கும் தாழ்ந்த நிலையைச் சிறிது நினைவு கூருங்கள்! நினைவு கூர்வதனால் நாணம் தலை தாழ்த்தச் செய்ய வில்லையா? இம் மன்னன் வரலாற் றைப் பிற்றை நாட சான்றோர்களாகிய **சேக்கிழார்** முதலிய தெய்வப் புலவர்களோ கடவுள் இயைபுடையதாகப் புனைந்து கூறுவராயின் இவன் வீரத்தின் பெருமை யென்னே!

மற்றும் புறவுக்காகத் துலை புகுந்து தன் உடற் றசையைக் கொடுத்த **சிபிச் சோழன்** முதலிய பல தமிழ் வீரர்களிருந் திருக்கின்றார்கள். இவன் போன்ற மன்னர்கள் வரலாறுகள் பல வற்றையுங் கூறுவதென்றால் இக்கட்டுரை மிக விரியுமென்றஞ்சி மன்னர் வீரச்செயல்களை இத்துடன் நிறுத்துகின்றேம். இன் னும் **மணிமேகலை** யென்னும் நூலிற் கூறப்படும் **ஆபுத்திரன்** வரலாற்றை ஆராய்வோமாயின் தமிழர் வீரம் நன்கு விளங்கும். இனி, பரிசிலராகத் திரிந்து கொண்டிருந்த பண்டைத் தமிழ்ப் புலவர்களின் வீரத்தை யாராய்வோம்.

அக்காலத்துப் புலவர்கள் அரசன் தனது அரசாட்சியில் தவறுவானாயின் சிறிதும் அஞ்சாது இடித்துரைத்து அவனை நல்வழிப்படுத்துவார்கள். பண்டைத் தமிழறிஞர் இதனைப்புறப் பொருளில் **செவியறிவுறூஉ** என்னுந்துறையாக அமைத்திருக் கின்றனர். **செவியறிவுறூஉ** என்னுந்துறைப்பாடல்களைப் **புற நானூறு**முதலிய பண்டைத்தமிழ் நூல்களிற் காணலாம். அத்த கைய வீரப்புலவர்கள் பலரிருப்பினும் ஈண்டுச்சிலரைப்பற்றிய செய்திகளையே கூறி முடிக்கின்றேம்.

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் என்னும் புலவர் **குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன்** என்னுஞ் சோழமன்னனிடம் பரிசில் பெறச்சென்றார். அம்மன்னன் இப்புலவர் பெருந்தன்மையைக் கருதாமல் பரிசில்கொடுத்தலின்றிக் காலம் நீட்டித்தான். அதுகண்ட புலவர் அரசனை நோக்கி "ஓ அரசனே யாம் மிக்கதுன்பத்தை யடைந்தோமாயினும் சிறிதும் அறிவில்லாதவர்களுடைய செல்லத்தை எய்துவதற்கு எண்ணமாட்டோம். ஆனால் நல்லறிவாளர்களின் வறுமையைப் பெரிதும் விரும்புவோம்" என்று கூறினார். இதனை

மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்
நல்லறிவு உடையோர் நல்குரவு
உள்ளுதும் பெருமயாம் உவந்துநனி பெரிதே

என்றதனுற் காண்க. (பு. நா. 197.)

இது அவ்வரசனைநோக்கி "அறிவில்லாத உனது செல்வத்தை யாம் விரும்பவில்லை" என்று செருக்குடன் கூறியதன்றோ? ஒரு பரிசிலர் நாடாளும் மன்னனைநோக்கி இங்ஙனங் கூறியது தமிழர்வீரம் அன்றோ?

பெருஞ்சாத்தனுர் என்னும் மற்றொருபுலவர் **கடியநெடு வேட்டுவன்** என்னும் குறுநில மன்னன்பாற் பரிசில் பெறச் சென்றனராக, அவன் இப்புலவருடைய பெருந்தன்மையை யறியாதும் பரிசில் கொடுக்காமலுங் காலந்தாழ்த்துக் கொண்டிருந்தான். அதுகண்ட புலவர் அரசனை நோக்கி "ஒரு குறுநில மன்னனே! நிறைந்த செல்வத்தையுடைய சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்களாயினும் எம்மை மதியாது பரிசில் தருவாராயின், யாமும் அப்பரிசிலை மதிக்கமாட்டோம்" என்று கூறினர். இதனை,

முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின்று ஈதல் யாம்வேண் டலமே.

(பு. நா. 205)

என்ற பாடலால் அறியலாம். தம்மைப் பொருளாக மதித்து ஈயாதவரைத் தாமும் ஒருபொருளாக மதிப்பதில்லையென்ற இவரது உறுதியான வீரம் தமிழர் வீரம் என்று கூறுதற்குரியதன்றோ?

பெருஞ்சித்திரனூர் என்ற மற்றொரு புலவர் அதியமான் நெடுமான்அஞ்சி என்னும் வேந்தன்பால் பரிசில் கருதிச்சென்றனர். அவ்வேந்தன் இவர் வருகையை யறிந்ததும் எதிர்கொண்டழைத்துச் சிறப்புச் செய்யாமல் பிறர் வாயிலாகப் பரிசில் கொடுத்துவிட்டான். பெருஞ்சித்திரனூர் அப்பரிசிலைப் பெற்றுக் கொள்ளாமல் "அரசன் என்னைக்கண்டு அழைத்து சிறப்புச் செய்யாமல் பிறர் வாயிலாகக்கொடுத்த இப்பொருளைப் பெற்றுக் கொள்ளமாட்டேன். யான் பொருள் வருவாய் ஒன்றையே கருதும் வணிகர்போன்ற பரிசிலன் அல்லேன்" என்றுகூறி மறுத்தார். இதனை,

............................காவலன்
காணது ஈத்த இப்பொருட்கு யானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன். (பு. நா. 208).

என்று கூறியிருப்பதனுல் அறியலாம்.

ஒரு காலத்திற் சேரமான் கணைக்காலிரும்பொறைக்கும் சோழன் செங்கணனுக்கும் போர் மூண்டது. அப்போரில் சோழன் செங்கணன் வெற்றி பெற்றுச் சேரமான் கணைக்காலிரும் பொறையைப் பிடித்துச் சிறையிலிட்டான். அது காலை சேரமானுக்கு ஆசிரியராகிய பொய்கையார் என்னும் புலவர் சோழன் செங்கணன் மீது களவழிநாற்பது என்னும் நூலைப் பாடி அவனைத் தனக்குப் பணியச் செய்து, சேரமானைச் சிறை மீட்டார். இதுவும் புலவர்களின் தமிழ் வீரமாகும்.

பிசிராந்தையார் என்னும் புலவர் தனது உயிர்த் துணைவனுகிய கோப்பெருஞ் சோழன் அரசியலை விட்டுத்துறந்து வடக்கிருந்து உயிர் நீத்தது நட்பின் உறுதியைக் காட்டும்

தமிழர் வீர மாகும் இங்ஙனம் புலவர்களின் வீரத்தை யறியத் தக்க பண்டைய வரலாறுகள் பல தக்க சான்றுகளுட னிருக்கின்றன. உண்மையாகவோ அல்லது புனைந்துரை யாகவோ வழங்கும் பிற்கால வரலாறுகள் சில தமிழர் வீரத்தை விளக்குவதனால் அவற்றையுஞ் சிறிது நோக்குவோம்.

மற்றவரோ தமிழ்பாடி நாட்டவல்லார் நக்கீரர் வலிய ராகி
வெற்றிபுனை மீனாட்சிசுந்தரநாயகர் அடுத்து விளம்பும்போதில்
பற்றுளதண் டலைவாழும் கடவுளென்றும் பாராமற் [பயப்படாமல்
நெற்றிவிழி காட்டினும் குற்றமே குற்றமென நிறுத்தினாரே

என்று பிற்றை நாட் சான்றோரால் பாராட்டப் படுகின்ற நக்கீரனாரின் வீரத்தின் தன்மையை விளம்ப யாரால் முடியும்? **நக்கீரனார் சிவனுடன்** எதிர்த்துச் சொற்போர் புரிந்து வெற்றி கொண்ட திறத்தை அறியாதவர் தமிழ் நாட்டில் யாருளர்?

இனி, பிற்றை நாட் புலவராகிய கம்பரின் வீரத்தைச் சிறிது சிந்திப்போம். இவரைப் புரந்து வந்த சோழ மன்னன் ஒருநாள் ஏதோ ஒரு பொருட்டால் தனது நாட்டை விட்டகலுமாறு கூறிய போது கம்பர் அம் மன்னனை நோக்கி:—

மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னை அறிந் தோ தமிழை ஓதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு.

என்று கூறுவாராயின் இவர் வீரத்தின் பெருமை யென்னே! இவ்வாறே **காளமேகப் புலவர், ஒட்டக்கூத்தப் புலவர், புகழேந்திப்புலவர்** முதலிய புலவர்களின் வீரச்செயல்களை நுனித்தறிவதனால் தமிழர்வீரத்தின் மேன்மைவிளங்கும். யாம் ஈண்டுக் கூறிய **நக்கீரனார், கம்பர்** முதலியவர்களின் வரலாறுகள் எத்துணை உண்மையோவென்பதை யறிவேம். ஆயினும் அவ்வரலாறுகள் தமிழ்ப்புலவர்களின் வீரத்தை விளக்கிக் கொண்டிருக்கும் ஒரு பொருட்டினால் ஈண்டைக்கு அமையுமென்றே கொள்வோம். (தொடரும்.)

உ

நெசவுத்தொழிலும், நம்மவர்களும்.

திருவாளர் நா. விசுவநாதையரவர்கள், கரந்தை.

ஒரு நாட்டின் சிறப்பும், வளனும், அந்நாட்டில் வாழும் மக்களின் தொழிலையும் நாட்டின் நில அமைப்பையும் பற்றிநிற்கும். இவ்விரண்டினுள் பிந்தியது, மக்களாலாக்க வல்ல தொன்றன்று; இயற்கையளவில் நிற்பதேயாம். அவ்வியற்கையளவிற் கேற்றவாறு அந்நாட்டில் வாழும் மக்களும் அறிவாற்றல் பெற்றோராவர் என்பது இயற்கைநூல் வல்லார்கண்ட முடிபாகும். அஃது எவ்வாறெனின், ஒரு நாடு தக்க நீர்வள நிலவளங்களையுடையதாய் ஏற்ற பருவங்களைப் பெற்றிருக்குமாயின், அந்நாட்டில்வாழும் மக்களும், உழவுத்தொழில் மிக்காராய், அந்நிலந் தரும்பொருளைக்கொண்டு தங்கட்கு இன்றியமையாதனவற்றைச் செய்துகொள்ளும் திறனுடையராயிருப்பர். அன்றி, அந்நாடு நீர்வள நிலவளங்களிற் குன்றியதாய், உலோகம் முதலிய பொருள்களை யுடையதா யிருக்குமேல், அந்நாட்டில் வாழுநர் அவ்வுலோகங்களாலாய பொருள்களைச்செய்யு மாற்றலுடையராய் அவற்றைக்கொண்டு பண்டமாற்றல் செய்து தங்கட்கு இன்றியமையாதனவற்றைப் பெறுவர். இனி ஒருநாடு அலைகடலுக்கிடையிலேனும் அதற்கு அருகிலேனுமிருக்குமேல், அந்நாட்டினர் அக்கடல் தரும் வளங்களனைத்தையும் ஒருங்கேயுடையராய் அக்கடலிற் பிரயாணஞ் செய்தற் குதவிப்பொருள்களாகிய படகுகள், கப்பல்கள் முதலியன யாத்தலிற் றிறனுடையராயிருப்பர். அன்றி, ஒருநாடு மலைகளுக்கிடையிலேனும், அல்லது அருகிலேனும் இருக்குமேல் அந்நாட்டினர் அம்மலைதரும் வளங்களான் மிக்காராய் உடல்வலி மிகுதியும்பெற்று முரட்டுத்தனமான பழக்க வழக்கங்களைக்கொண்டவராயிருப்பர். இவ்வாறாக, ஒன்றற்கொன்று மாறுபட்ட நிலநிலைகளை யாராயுங்கால் நம் இந்திய நாடானது மேற்கூறிய பல்வகை வளங்களையுமொருங்கே வாய்க்

கப்பெற்றதோர் நாடென்பது தெள்ளிதிற் புலப்படும். ஆயினும் பொதுமுறையில் நோக்குங்கால் நம் நாட்டினர்களில் பெரும் பாலோர் உழவுத்தொழிலையும் நெசவுத்தொழிலையுமே முதற் றொழில்களாகக்கொண்டு, இவைகளின் உதவியால் ஏனைய நாட் டினர்களோடு வாணிபஞ்செய்து வந்தனரென்பது நம் பண்டை நூற்களின் ஆராய்ச்சியாற் போதருகின்றது. இவ்வுலகத்தில் நாம் காணும் தொழில்களனைத்தினும் உண்ண வுணவு முடிக்க வுடையுந் தரவல்ல உழவு, நெசவு ஆகிய இருதொழில்களுமே மிகச்சிறந்தனவாகும். இவற்றுள் முந்தியதை நம் முன்னோர் பேணியவாறு அத்துணை யுயர்வாக நம்மவர் இதுபோது பேணு தொழியினும், நம்மவர்களிற் பெரும்பாலோர் இன்றும் உழவுத் தொழிலையே மேற்கொண் டொழுகுகின்றனர். ஆயினும் இது போது நம்மவர்களில் மிகவும் அரிதாகக்காணப்பெறும் நெசவுத் தொழிலைப் பண்டைக்காலத்தில் நம்முன்னோர் எந்நிலையில் வைத் துப்புரந்தனரென்பதைச் சிறிது ஆராய்வோம்.

இவ்வுயர்தொழில்தன்னை யுயிரெனவோம்பி, அத்தொழிற் றுறைகளனைத்தையுங் கற்றுத்துறை போகிய, நம் இந்தியநாட் டுப் பண்டைமக்கள் இன்றைக்குப் பல்லாயிரமாண்டுகட்கு முன் னர்த்தொடங்கி இருநூறு ஆண்டுகட்கு முன்னர்வரை, இது போது நாகரீகத்தினில் மிக்காரெனப் பெயர்படைத்த மேனாட் டாரனைவரும் தாமுடுக்கு முடைகளையுமாக்குவிக்கும் வகையறி யாராய், அன்னவர் கைகளையே ஆவலுடன் எதிர்நோக்கச்சிறந் தனரெனில், நம்முன்னோர் மேற்கொண்டொழுகியகைத்தொழில் களின் சிறப்பையும் மிகுதியையும் விரித்துரைத்தல் வேண்டா வுரையாமன்றோ? எனினும், இதற்குச்சான்றாக நம்மவர்களால் மிகப் பழையகாலங்களில் எழுதப்பெற்றதாகக் கருதப்படும் நூல்களினின்று பல மேற்கோள்கள் காணுதல் எளிதெனினும், நம்மவர்களின் சிறப்பைப்பற்றி நம்மவர்களே கூறியிருப்பது தக்க சான்றாகாதெனக் கூறுவர் தம்கூற்றைமறுப்பான், ஈண்டுச் சில மேனாட்டு ஆசிரியர்களின் ஆராய்ச்சி யுரைகளையும் மற்றும் பல மேற்கோள்களையும் காட்டுதும். மேனாட்டார்களின் பழைய நூற்களுள் ஒன்றாயதும் அவர்களால் வேதமெனக்கருதப்படு

வதுமான (Bible) பைபிளில், கிருஸ்து பிறத்தற்கு முன்னர்ப் பதினைந்தாம் நூற்றாண்டிற்கும் பதினேழாம் நூற்றாண்டிற்கு முட்பட்ட காலத்தில் நம் நாட்டவர்களுடைய நெசவின் சிறப்பு நன்கு கூறப்பட்டுள்ளது. (Vide the book Job VII 6 Chapter & Exdous XXXV 25th chapter) மற்றும் மேனாட்டுச் சரித்திர ஆராய்ச்சி வல்லுநராகிய "தாண்டான்" (Thanton) என்பார் பண்டைக்காலத்து இந்தியர் நாகரீகத்தைப் பற்றிக்குறிக்குங்கால் மிகப்பழைய நாகரிகம் படைத்த எகிப்தியர்களும் மேனாட்டார்களின் நாகரீகத்திற்குப் பிறப்பிடமாகிய "கிரீசு" 'இத்தாலி' முதலிய நாட்டவர்களும் காட்டு மனிதர்களைப்போல் அலைந்து திரிந்த காலத்திற்கு முன்னரே நம்நாட்டவர்கள் செல்வவளத்திற் சிறந்த கைத்தொழில்களில் வல்லுநராய்ச் சிற்பத்திற் கைதேர்ந்தவராய் உழவுத்தொழிலின் உயர்வையுணர்ந்தவராய்ச் சிறந்து விளங்கினரென்றும், நம் நாட்டு அரசர்களும், செல்வர்களும், ஏனைய நாட்டார்கள் வீடு கட்டும் வழியறியாது அலைந்து திரிந்தபோழ்தே மாடமாளிகைகளில் வசித்துக் கைத்தறிகளால் ஆக்குவிக்கப்பெற்ற கண்ணைக் கவரத்தக்க அழகிய உடைகளையணிந்து செல்வவளம்பெற்று தங்கம், வெள்ளி, வைரம். முத்து முதலியவைகளாலாய அலங்கார அணிகள் பலவற்றை உபயோகித்துப் பழக்க வழக்கங்களிலும் சிறந்து விளங்கினரென்றுங் கூறிப்போந்தனர். மற்றும் மேனாட்டுப்பருத்தி நூற்றொழில் வல்லாரும் "பருத்திநூல் நூற்றல்" பருத்திநூல் நேசவு என்பனபற்றி எழுதப்பெற்ற நூற்களுக்கு ஆசிரியராகிய "ஜான்வாட்சன்" (Jhonwatson) என்பார் வணிகத்தில் முதன்மைபெற்றிருந்த இந்திய நாட்டினர்கள் "அலக்சாந்தர்" காலத்திலேயே உயர்ந்த மெல்லிய பருத்திநூற்றுணியை யணிந்து வந்தனரென்றும், ஐரோப்பிய நாட்டவர்கள் இந்திய நாட்டுடைகளை ஓர் அலங்கார அணிகளாகக்கருதிப் பேணிவந்தனரென்றும், இந்தியர்களும் எகிப்தியர்களுமே ஆதியில் நெசவுத்தொழிலில் கைதேர்ந்தனராயிருந்தனரென்றுங் கூறுகின்றார். இத்தகைய உயர்நிலையிலிருந்த நாம் இதுபோது எந்நிலையிலிருக்கின்றோமென்பதைச் சிறிது

ஆராய்தல் அவசியமன்றோ? நாம் உணவும் உடையும் ஒருங்கே தரவல்ல உயர்தொழில்களை மறந்தோம்.

ஏனைய நாட்டார் இழித்துரைக்கும் இயல்பினை எய்தினோம். அன்னார்மொழிகளையே அல்லும் பகலும் பயின்று முன்னோர் தேடிய பொருளை முழுதுமிழந்தோம். மேல்நாட்டினர் தம் காலடிபணிந்தோம். பிழைக்கும்வழியை முற்றிலுந்துறந்தோம். சேவகத்தொழிலையே சதமெனக்கொண்டோம். உடுக்கும் உடைக்கும் பல்லாயிர மைலுக்கப்பால் உள்ளாரின் உதவியை நோக்கி நிற்கும்நிலையை யெய்தினோம். அந்தோ! எத்துணை இளைஞர்கள், எத்துணைவாலிபர், எத்துணைச்சிறார்கள், எத்துணைக் காளையர், பல்பொருள் வீசியும், பழுதிலாது பள்ளியிற்பயின்றும் பட்டம்பெற்றும், பயனிலராயினர். பட்டச்சுவடியைக் கட்டி யெடுத்து, வீதிகள்தோறும் வீணிலலைந்தும் வேலையொன்றும் கண்டிலர். என்னே! நெருநல்தோன்றிய நாட்டினர் நாளை நம் நாட்டிற்கு ஆடைகள் அனுப்பாதொழிவரேல் என்னே! நம் நிலையாவது? இலைச்சருகை யெடுத்து இடையிலுடுப்பதா? இயற்கையழகை ஏந்திநிற்பதா? என்னோ செய்வது? கைப்பழத் தைவிட்டுத் துறட்டிப்பழத்திற்கு அண்ணாந்து நிற்றல் அறிவு டையார்க்கழகாமோ? இதுபற்றிப்போலும் உலக முவக்கும் உயர்தனிச்செல்வன் காந்தியம்பெருமான், நம்மவர் ஏழைமையை யுள்ளவாறறிந்து, அவர்களதழிவைத், தனதெனக்கருதி, எதிர் காலநிலைபைத் தீதிலாதுணர்ந்து, நம்மவர் துயரைத்துடைப் பான், பஞ்சுநூல் நூற்கும் பாவமில் தொழிலையும், அசைவில் செல்வம் அளவிலாதளிக்கும் நெசவுத்தொழிலையும் சிக்கெனப் பிடித்தனன். இனியேனும் நம்மவர்கள் நீண்ட தூக்கத்தினின் றும் விழித்துச்செய்வன செயப்புகின் ஒருவாறு நாமிழந்த வற்றை மீட்டும்பெறுதலும்கூடும். அவ்வாறு நமது பழயநிலையை அடைவான் முயலுதற்குமுன்னர், நம்மை இத்துணைக்குன்றிய நிலைக்குக்கொண்டுவரத் துணையாயிருந்தவற்றை யாராய்ந்து அவற்றைக்களைந்தெறிதல் இன்றியமையாததாகலின் அவற்றைப் பற்றிச்சிறிது ஆராய்வாம்: நால்வகைப்பட்ட நெசவுகளாகிய 'பருத்தி, பட்டு, நார், கம்பளம் என்பனவற்றுள், இதுபோது

மிகச்சுருங்கிய விலையுளதும் மிக்க அவசியமானது மாய பருத்தி நெசவே பண்டைக்காலத்து மற்றைய நெசவுகளனைத்தினும் பின்னர்த் தோன்றியதெனச் சரித்திர ஆராய்ச்சி வல்லார்கூறுவர். ஆயினும் இப்பஞ்சுநூல் நெசவை நம்மவர்கள் மிகப்பழய காலந்தொட்டுக் கையாண்டுவந்தனரென்பது மேற்கூறியவாற்றான் மேனாட்டார்க்கும் ஒப்பமுடிந்த தோன்றுயிற்று. இவ்வுலகின் வியாபாரமேடைகளையும் தம் வயமாக்கிக்கொண்ட மேனாட்டவர்கள் பதினான்காம் நூற்றாண்டிலேயே நம்மவரிடத்திலிருந்து அதனைக்கற்றுப்போய்ப் பயின்று வந்தனரெனினும் அத்துறையில் நம்மவர்களைச் சிறிதும் வெல்லுமாறு அறிந்திலர். ஆயினும் நாளடைவில் நூற்றாண்டினிடையில் 'பரி' (Bury) என்னும் ஊரினராகிய 'கே' (Kay) என்பார் கையினால் நூனுழி அல்லது நாடாவை எறிதலை யொழித்து நாடாவை விரைவிலும், கைநோவாமலும், செலுத்தத்தக்கதோர் வழியைக் கண்டுபிடித்தார். இதனையே இழுநூனுழி யென்பர். (Fly shuttle) இப்புதிய முறையானே நெசவுத்தொழில் மேனாட்டில் விரைவிற் பெருகியதோடு எளிதிலும் உடைகள் வரற்குக்காரணமாயிற்று. மேலும் எளிதாக பாவுபோடும் முறைகளையும் கஞ்சிபோடும் முறைகளையும் புதிது புதிதாகக்கண்டுபிடித்தனர். இவ்வாறு பலதுறைகளிலும் முயன்று பலவித புதுமுறைகளையும், எளியவழிகளையும் தோற்றுவித்து, முடிவில் பலவகைப்பட்ட பொறிகளின் உதவியால் நம்மவர் வாயையும் கையையும் அடக்குமாற்றலைப்படைத்தனர்.

இவர்கள் இவ்வாறு அயராது ஊக்கங்கொண்டு உழைத்துவந்த காலங்களிலெல்லாம் நம்மவர்கள் நம் பண்டைமுறைகளையே விடாது கைப்பற்றி இப்புதியமுறைகளிற் சிறிதும் மனஞ்செலுத்தாது ஒழியவே, அவர்கள் நம்மவர்களைக்காட்டிலும் குறைந்த விலைக்குத் துணிகளை விற்கும் ஆற்றல்பெற்று, நம் கைத்தொழிலாளர்களின் ஊக்கத்தைக் குன்றச்செய்து, நம்மவர் வாணிபத்தையும் கைக்கொண்டனர்.

மேலும் ஒரு நாடு கைத்தொழிலிற் செழித்தோங்கி வளர வேண்டுமாயின் அந்நாட்டின் அரசாங்கத்தார், கைத்தொழிற் கல்லூரிகள் பலநிறுவி அவற்றில் பலநாடுகளிலும் காணப்பெறும் புதியமுறைகளைக் கற்பிக்கத்தக்க பலஆசிரியர்களை நிறுவி, ஏழை மக்களை அவற்றில் இலவசமாகப் பயிற்றித், தொழிலாளர்களைப் பலவகைகளிலும் ஊக்கி, அவர்கட்கு வேண்டிய வசதிகள் செய்து தந்துதவுதல்வேண்டும். இவ்வாறு செய்துவரும் நாடுகளே தொழில்முறைகளிற் பெருகியும் வணிகத்திற் சிறந்தும் வளரும். ஆயினும் நம் அரசாங்கத்தினர் இவ்வகை முயற்சிகள் ஒரு சிறிதும் செய்ய முன்வந்தாரில்லை. ஒருவாறு தங்கள் வாணிபத்திற்குக் கேடு வந்துவிடுமோவென அஞ்சினர்போலும்.

எனவே நம்மவர் கைத்தொழில் பலபுதிய முறைகளானும் பொறிகளின் வலியானும் அரசாங்கத்தார் உதவிக்குறைவானும், நம்மவர் ஊக்கமின்மையானும் பட்டொழிந்த தென்பது பெற்றாம்.

இனி நாமிழந்த இந்நெசவுத் தொழிலை மீட்டும் பெறுதற்கு நாம் மேற்கொண்டொழுகவேண்டிய முறைகளின்னவென்றும், இடையில் நேர்தற்கேதுவாய இடையூறுக ளிவையென்றும், அவைகளை விலக்குமாறுகளிவையென்றும் நோக்குத லின்றி-யமையாததாகும்.

(தொடரும்.)

உ

வள்ளல்கள் வரலாறு.

(முற்றொடர்ச்சி)

திருவாளர், ஔவை. சு. துரைசாமிபிள்ளையவர்கள்,
ஆசிரியர், க. த. சங்கம்.

இங்ஙனம் வள்ளைமயும் வனப்பும் வண்மையும், திறலும் பொருந்தி,

"வென்றியும் விறலும் விழுத்தகு விஞ்சையும்
ஒன்றிய நண்பு மூக்கமு முயற்சியும்
ஒழுக்க நுனித்த உயர்வும் இழுக்கா
அமைச்சி னமைதியு மன்பும் அறனும்
சிறப்புழிச் சிறத்தலும் சிறந்த வாற்றலும்
வெங்கோல் வெறுப்பும் செங்கோற் செல்வமும்
செருக்கிச் செல்லும் செலவின......"

னாகி விளங்கிய பேகனுக்குப் பெருந்தகு கல்வியும் பிறர்மனம் புகாப் பெறலருங் கற்பும் பெற்ற கண்ணகி யென்னும் மனைவி யொருத்தி யிருந்தனள். அவள்

"தெய்வத்தாமரைத் திருமகட் கெடுத்தோர்
ஐயப் படூஉ மணியிற் கேற்ப
ஒண்மையு நிறையு மோங்கிய வொளியும்
பெண்மையும் பெருமையும் பிறவும்";

உடையவள். இத்தகைய பெறலருந்திருவன்னாளைப் பெற்றும், அப்பெரும்பெயர்ப்பேகன், பிறர்நலம் வேண்டும் பொது மகளொருத்தியின் வனப்புவலைக்குட்பட்டுத் தன்மனைவியை யும் துறந்து அவள்வய மாயினன். அப்பொதுமகள், நாற்புற மும் காடுசூழ்ந்த நல்லூரின் கண் இருந்தனள். அவள்வலை யிற் சிக்குண்டபேகன், நாடோறும், அவளுடைய கூட்டமே விரும்பி யொழுகுவானாயினன்.

இவ்வாறு இவன் பரத்தையிற் பிரிந்து ஒழுகுதல் கண்ணகிக்குத் தெரிந்தது. உடனே அவள்தன் மனம் பதைபதைப்ப, இருதடங் கண்களினின்றும் அருகக் கண்ணீர் பெருக, அல்லிருங் கூந்தல் அலைந்து சோர, குமுதவாய்திறந்து கோவெனக் கதறி "இப்பெரிய கற்பொற் பிரியலம் என்ற சொற்றுன் எம்தலைவர் மறந்தனர்கொல்லோ! சான்றீர்!" எனப் புலம்பிச் சாம்பினள். மருங்கிருந்த மங்கையர் எத்துணை ஆறுதல் கூறியும் அவள் தேறினளில்லை. என்செய்வாள்! கண்ணகியென்னும் பெயர்படைத்தார்க் கெல்லாம் இத்தகைய துன்பங்கள் நிகழ்தல் இயற்கைபோலும்!! கூடினர்க்குப் பிரிவினும் கொடிய துன்பந் தரும் பொருள் யாதுளது? பிரியாத கணவன் பிரிந்தானென் பதனாலெய்திய துன்பம் ஒருபுடை வருத்தினும்; பொருட் பெண்டிரின் பொய்ம்மை முயக்கத்தை விரும்புவோர் எதில் பிணத்தைத்தழுவும் ஈனர்களே எனவும், அவரைவிட்டுப்பகை, பாவம், அச்சம், பழியென்னும் நான்கும் நீங்காது நிற்குமெனவும், அதனால் வாழ்க்கைத்துணைக்குக் கூறிய இலக்கணங் களுளொன்றாய புகழ்புரிதல் தனக்கியலாது ஒழிய இறுதியில் மாட்சிக்குறைவெய்து மெனவும் வரும் தமிழ்மறைப்பொருளை நினைக்குந்தோறும் தோன்றும் வருத்தமே தலைநின்று அவள் மனத்தைத் துன்புறுத்திற்று.

பின்னர்த் தோழியர் தேற்றச் சிறிது தேறி, அவனது நாட்டில் ஓர் சிற்றூரின்கண், அவள் இறைவனை வேண்டிவந்தனள். அவனன்றி அவள் மனக்கவலையை மாற்றவல்லார் வேறு யார்?

நிற்க, அந்நாளில் காலம் வாய்ப்புழி மக்கட்கு நல்லறிவு கொளுத்தி அவர் மனத்தைச் செந்நெறியிற் செலுத்தும் ஆன்றவிந்தடங்கிய கொள்கையினையுடைய சான்றோர் பலர் இருந்தனரென முன்னரே கூறினேனல்லவா? அவர்களுட் கபிலர் என்பாரொருவர். அவர் மரபில் அந்தணர். இதனை, "யானே, பரிசிலன் மன்னும் அந்தணன்" எனவும், "யானே, தந்தை தோழன் இவரென்மகளிர் அந்தணன் புலவன் கொண்டுவந்தனனே" எனவும் அவரே கூறியிருத்தலினாலும்,

"புலனழுக்கற்ற அந்தணாளன்" என அவரை மாறோக்கத்து நப்பசலையார் கூறியுள்ளதனாலும் நாம் அறியலாம். இவரது ஊர் திருவாதவூர் எனத் திருவிளையாடற் புராணங்கூறும். பிறர் பிறவாறுங் கூறுவர். அதனைப் பின்னர்த் தனியே நோக்குவோம். நிற்க, இவர் நம் தமிழ் நாட்டுப் பண்டைய நல்லிசைப் புலவர் பெருமக்களுள் சிறந்தவராவர்.

இவர் ஒருநாள் தனது சுற்றம் புடைவர, பேகனாட்டு வழியே வருங்கால், பசி மிக்கு வருத்த ஒரு காட்டகத்துத் தங்கினர். அது, நம் கண்ணகியிருந்த பேரகத்துப் புறத்திருந்த அரணமாகும். அதனருகிருந்த ஊர் ஒரு சிற்றூர்; எனினும், அது, அயலில் விளங்கிய குன்றில் குளிர்கொள் ளருவி ஒன்று,

"மறுவில் மானவர் மலிந்த மூதூர்
வெறிது சேறல் விழுப்பம தன்றெனக்"

கானவாழையும், பல் கனி வகையும், மணியும், முத்தும் அணி பெற வான்றி, வேறு மலைபடு பொருள்கள் பலவுடன் நிறைந்து வந்து இழிதருமோர் நீங்காச்செல்வம் படைத்திருந்தது. அங்ஙனம் அது இழிதருங்கால் எழுந்த வோசை பெருமுரசொன்றை ஒரு கடிப்பினால் அறையும்பொழுது எழும்ஓசையையொத்திருந்தது. இக்காட்சியைக்கண்ட கபிலர், அந்நாட்டழகை உள்ளத்தே யுன்னினராக, அந்நாடுடையான் புகழ்பாடுதல் வேண்டுமென வோரெண்ண முண்டாயிற்று. உடனே, அவர் அவ்வூரின்வாயிற்கண் நின்று "திருவிழை மூதூர் வாழ்க" என்று வாழ்த்தி, மன்னனையும், மனக்கினிய காட்சியைப் பயந்த மலையையும் பாடினர்; இப்பாடல் உள்ளிருந்த கண்ணகியின் செவிக்கெட்டிற்று. அந்நாடுடையான் தன் இன்னுயிர்க் கணவனாகலின், அவன் புகழ்பாடக் கேட்டலும், அவளது மனம் எரியிடைப் பட்ட இழுதென வுருகிற்று; மெய்விதிர் விதிர்த்தது; கண்ணீர் பெருகத்தொடங்கிற்று; அவள் தன் துயரத்தை மறைப்பான் செய்த முயற்சிகள் வீணாயின; இறுதியில், அவள் தன்மலர்வாயைத்திறந்து, குழலேங்குமாறு ஏங்கி யழத்தொடங்கினள்.

இவ்வழுகையொலி கபிலர்செவிப்படலும், கருணைமிகுதிப் பட, அவர் கண்ணகியின் முன்சென்று, நிகழ்ந்தவற்றை வினவி, யுணர்ந்து, அவட்குத் தக்குரைகள் பல கூறிச்சென்றனர். சென்றவர் நேரே பேகன் மாட்டடைந்தார். புலவர் பெருமான் வரவைக்கண்டபேகன், பேருவகைகொண்டு, ஓர் இருக்கையில் அருத்தியோடு இருத்தலும், புலவர் அவனை நலம் பல கூறி வாழ்த்தி, "மழைவேண்டுங்காலத்துப் பெய்வித்தற்கும், வேண்டாக்காலத்து ஒழித்தற்கும் பலியிட்டுக் கடவுளை வழிபடும் குறமக்கள், மழையிடத்துமாறிய உவகைமிக்கவராய், மலைச்சாரலில் விளையும் தினையுண்ணும் பெருவாழ்வு திகழும் நாட்டையுடையாய்! போர்வன்மையும் கொடைவன்மையும் பெற்ற ஏ! பேக! நெருநல் யான் என் சுற்றம்தொடர ஒரு சுரத்திடை வருங்காலத்துப் பசிப்பிணிவந்தெய்திற்று. அருகிருந்த அருவி விளங்கும் சாரலையுடைய குன்றொன்றின் அடிவாரத்துள்ள ஓர் சிற்றூரை யாங்கள் அடைந்து, வாயிற்கண் நின்று நின்னையும் நின் மலையையும் பாடினேம். அவ்வமயம், அழகிய மாதொருத்தி, எம் பாடல்கேட்டு வேய்ங்குழலொத்த மெல்லிசையிட்டு அழுதனள். யாங்கள் எத்துணையாறுதல் கூறியும், அவள் துயரம் ஆறவில்லை. அவ்வளிக்கத்தக்காள் யார்கொல்? அவள்பால் நீ அருள்பண்ணத்தகும். ஏனெனின், நின்மலையிலுள்ள குறமக்கள் கடவுளைவழிபட்டு மழை வேண்டியபொழுது பெற்றுத் தாம் வேண்டுமுணவு நுகர்வதுபோல், இவளும் நின் அருள் பெற்று இன்பம் நுகர்பவளாதல் வேண்டுமல்லவா?" என்னும் பெறலரும் பொருளமைந்த பாட்டொன்றைப்பாடினர். அது

"மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய வுவகையர் சாரற்
புனத்தினை யயிலும் நாட! சினப்போர்க்
கைவள் ளீகைக் கடுமான் பேக!
யார்கொல்? அளியள் தானே! நெருநல்
சுரனுழந்து வருந்திய ஒக்கல் பசித்தெனக்

குணில்பாய் முரசின் இரங்கும் அருவி
நளியிருஞ் சிலம்பின் சீறூர் ஆங்கண்
வாயிற் ரோன்றி வாழ்த்தி நின்று
நின்னும்நின் மலையும் பாட இன்னாது
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைப்ப விம்மிக்
குழல்இனை வதுபோல் அழுதனள் பெரிதே"

என்பதாம்.

இதுநிற்கப், பின்னர் ஓர் நாள் பரணர் என்னும் வேறொரு தமிழ்ப்பெரியார், கண்ணகியிருந்த சீறூருக்குப் போந்தார். இப் பெரியாரை மேற்கூறிய கபிலருடைய தோழரெனவுங் கூறுப. இவர் மன்னர்களின் வீரத்தையும், அவரது போர்த்தொழில் களையும் சிறப்பித்துப்பாடுவதில் மிகவும் வல்லவர்; பேகனுடைய குணங்களை முன்னரே நன்கு உணர்ந்தவர்; அவனைப் புகழ்ந்து பாடிப் பல பரிசில்களும் பெற்றவர்; பேகனது மலைநாட்டைப் பெரிதும் போற்றிப்பேசும் ஒருவருமாவர்.

"இருப்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பின்
கருங்கை யானை கொண்மூ வாக;
நீள்மொழி மறவர் எறிவன ருய்த்த
வாள்மின் னாக; வயங்குகடிப் பமைந்த
குருதிப் பலிய முரசுமுழக் காக;
அரசராப் பனிக்கும் அணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக;
விசைப்புறு வல்வில் வீங்குநாண் உகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயின் தேர் ஏராக;
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு பைஞ்சால்
பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி
விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு போர்பு

கணநரி நோயோடு கழுதுகளம் படுப்பப்
பூதங்காப்பப் பொலிகளந்தழீஇப்
பாடுநர்க் கிருந்த பீடுடை யாள!"

எனவரும் இவரது, சேரமான் கடலோட்டிய வெல்கெழு குட்டுவனைப்பாடிய பாட்டின்கண், அவனுடைய போர்த்தொழிலின் சிறப்பை உழவுத்தொழில் புரிவாரது வினைத்தொழிலொடு உவமித்துப்பாடும் திறத்தாலும்; "வாள் வலந்தர மறுப்பட்டன" எனத்தொடங்குவதும், சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியைப் பாடப்பெற்றதுமாகிய புறப்பாட்டின்கண், இவர் அவனது வாள், தாள், தோல், குதிரை, யானை முதலியவற்றின் சிறப்பையும்,

"நீயே, யலங்குளைப் பரீஇ யிவுளிப்
பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி
மாக்கடல் நிவந்தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ.
அனையை யாகன்மாறே,
தாயில் தூவாக் குழவிபோல
ஓவாது கூஉம்நின் உடற்றியோர் நாடே." என

அவனது வீரத்தையும், அதனலெய்தும் வெற்றிச்சிறப்பையும், விதந்து கூறுவதனுலும்; "பாணனல் சூட்டப்பெற்றதும், பசும்பொன்னற் செய்யப்பெற்றதுமாகிய தாமரைப்பூப்போலும், கைவினை யமைந்த அணிகலன்களாற் பொலியும் பாடுமகள் ஒருத்தி, பொன்னரிமாலை யொன்றை யணிந்துவிளங்க, விரைந்த செலவினையுடைய குதிரைகள்பூட்டிய தேரை நிறுத்திவிட்டு, இக்காட்டின்கண், ஒரு ஊரிலிருப்பவரைப்போல் வருத்தமின்றி யிருக்கின்றீர்களே, நீங்கள் யார், பாணரோ? என எம்மைக்கேட்கும் வறுமைமிக்க ஏ! இரவல! யாமும் நின்னையொத்த இரவலரே. வெல்வேலண்ணலாய வையாவிக்கோப் பெரும்பேகனை, யாம் காணுமுன்னர், நின்னினும் புல்லிய வறியராயிருந்தேம். இப்பொழுது, அவனைக்கண்டமையான், எம் வறுமைநீங்க இத்தன்

மையராயினேம். அப்பேகன், என்றும்

உடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக்(கு) ஈத்தஎம்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினு மீத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர், வறுமை நோக்கின் றவன்கை வண்மையே.

ஆதலால் நீயும் அவனை விரும்பிச்சேறல் நலம்'' எனப்பொருள் படும் பாணாற்றுப்படையாலும்;

"அறுகுளத் துகுத்தும் அகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா(து) உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே!'

எனவரும் இயன்மொழி வாழ்த்தாலும்;

"... ... . மெய்ம்மலிந்து
அருவி யார்க்கு மயந்திகழ் சிலம்பின்
நுண்பஃ றுவலை புதன்மிசை நனைக்கும்
வண்டுபடு நறவின் வண்மகிழ்ப் பேகன்
கொண்டகல் மாமலை நாறி
அந்தீங் கிளவி வந்த மாறே'' எனவரும்

இவர்பாடிய அகப்பாட்டாலும் மேலேகூறப்பட்ட பொருள்கள் துணியப்பெற்றன. இனியும் இவரைப்பற்றிக் கூறத்தொடங்குதல் மற்றொன்று விரித்தலாதலால், இம்மட்டினிறுத்தி மேலே செல்கின்றேன்.

இங்ஙனம் போந்த இப்பாணர், அவ்வூரின்கண் தங்கினராக, தென்றல் விரவ, தேமலர்கள் நறவந் துளிக்க, வண்டினம் மூரல, மயிலினம் அகவல்செய்ய, குயில்கூவ, புணர்ந்தோர் பூவணி

யணிய, பிரிந்தோர் பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப, அந்தி மாலைவந்தது. அக்காலை வெங்கதிரோன் மேல்கடல் குறுகுபு மலைவாய் அடைந்தனன்; அவனது பொற்கதிர் இருள் படப்பொதுளிய கானத்தைப்பசும்பொற்படாமெனத் தோன்று மாறு மெல்வெயிலைப் பரப்பிற்று. இச்சிறப்பைக் கண்ணுற்ற பாணர்க்கு, அந்நாட்டின்மாட்டுப் பேரன்பு தோன்றுதலும், அக் கானத்தை நோக்கிச் செவ்வழிப்பண்ணில் ஒரு இனிய பாட் டொன்றைப் பாடினர். அப்பண், கேட்டார் மனத்தையுருக்குந் தன்மையுடன் இரங்கற்பொருட்டுப் பாடப்பெறும் தனிப் பெருஞ் சிறப்புமுடையது. இதன் பெருமையைச் சேக்கிழார் பெருமான், ஆனாயநாயனார் புராணத்துட் டிருவாய் மலர்ந்துள்ள,

ஆனிரைக ளறுகருந்தி யசைவிடா தருகணையப்
பானுரைவாய்த் தாய்முலையிற் பற்றுமிளங் கன்றினமுந்
தானுணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமும்
மான்முதலாங் கான்விலங்கு மயிர்முகிழ்த்துநெகிழ்த்தனவே.”

என்றற்றொடக்கத்து அருங்கவிகளுட்காண்க. இது கண்ணகி யின் செவிப்படலும், பிரிவுத்துன்பம் பெயர்த்து மெழுந்தது; பாணரிருந்த விடத்தையணுகினள். அவர் பாடியபண் அவளு டைய கண்ணீரைப் பெருகச்செய்ததேயன்றி அருகச்செய்த தில்லை. அவரும் அவருடன் வந்தாரும் கூறியவனைத்தும் ஆற் றுவாயின. பின்னர், “அவர், இளையோய்! எங்களுடைய நட்பைப் பெருந்தனமாகக் கருதும் பேகனுக்கு நீ உறவுடையையோ?” எனத்தன் சுற்றத்துடன் வணங்கிக்கேட்டனர். காந்தள்மொட் டைப்போன்ற தன்மெல்லிய விரல்களால் அவள் தன் கண்ணீ ரைத் துடைத்துக் “கேண்மின், எம் ஆருயிர்ப்பேகன், எம் போலும் அழகுள்ள மாதொருத்தியைக் காதலித்துள்ளான். அவள் நல்லூரின்கண் இருக்கின்றாள். அவ்வூர்க்கு அவன் ஒல் லெனவொலிக்கும் தேருடன் எந்நாளும் வருகின்றான் எனப் பலருங்கூறுகின்றனர்.” எனக்கூறிப்புலம்புதலும், பாணர்தேற்ற ஒருவாறு தேறி நின்றாள். பின்னர், அவருமவ்வூரைவிட்டு, அவட்காகப்பரிந்து பேகனிடம் சென்றார்.

பாணர் வரவறிந்த பேகன் பரிவுகூர்ந்து வரவேற்று, அரிய இருக்கைதந்து அவரது குறிப்பு நோக்கி நின்றனன். பின்னர், தான் கருதிவந்ததை முடித்தற்கு ஏற்றகாலம் தோன்றலும்,

"அருளா யாகலோ கொடிதே! இருள்வரச்
சிறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடி னேமாக;
நீனறு நெய்தலிற் பொலிந்த வுண்கண்
கலுழ்ந்துவா ரரிப்பனி பூணக நனைப்ப
இனைத லானா ளாக; இளையோய்!
கிளையைமற் றெங் கேள்வெய் யோற்கென
யாந்தற் றொழுதனம் வினவக் காந்தள்
முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா
யாம் அவன் கிளைஞரேம் அல்லேம். கேள் இனி!
எம்போ லொருத்தி நலன்நயந் தென்றும்
வரூஉ மென்ப வயங்குபுகழ்ப் பேகன்
ஒல்லென வொலிக்கும் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே." என்ற பாட்டைப்

பாடினர். இப்பாட்டின்கண் இவர், தான் கண்ணகியைக்கண்டது முதல் பேகன் நல்லூரேகுதல் ஈறுகக் கிடந்தவற்றைக் கூறத் தொடங்கி, முதற்கண் அவனது அவையையும் பின்னர்த்தான் சொல்லப்போவனவற்றையும் நன்குணர்ந்துகூறும் சதுரப்பாடு உணர்வார் உணர்வுக்குப் பேரின்பந்தரும் தகைமைத்து. உணர்ந்தவற்றை முறைப்படத் தொகுத்துள்ள நேர்மை ஆயுந்தோறும் இன்பந்தருவதாகும். முதலாவதாக, தான் கூறவந்த பொருள் பேகன் செய்த குற்றத்தை எடுத்துக்காட்டுதலும், அதன்பயனை நேர்ந்த குறைகளை நீக்குதலுமாம்.

இவர் அக்குற்றத்தைக்காட்டுதல் வேண்டித் தொடக்கத்தே "அருளாய் ஆகலோகொடிது" என அவனது அருள்பெற்றுக் கொள்கின்றனர். பின்னர், அவன்செய்த குற்றத்தாற் கண்ணகிக்கு எய்திய குறையைத்தான் அறிந்தவாற்றைக்கூறுவார், தான்செவ்வழிப்பண்ணையிசைத்து அவனது கானத்தைப்பாடின.

தாகவும், அதுகேட்ட கண்ணகி தானே கலுழ்ந்து புலம்பின தாகவும் கூறுகின்றார். அதனால் கண்ணகியின் மனத்தூய்மை யையும், கற்புநெறியையும் குறிப்பித்தமை தோன்றுகின்றது. பிறளொருத்தியின் நலன் நயந்து பேகன் சேறலை ஐயுற்றார் போன்று, கண்ணகியின் கூற்றின்வழியே "ஒருத்தி நலன் நயந்து என்றும் வரூஉம் என்ப" என்று கூறும் சொல்வன்மை அவரது சால்புடைமையைத் தெரிவிப்பதோடு, அவர் அவனது குற் றத்தை அவனுக்கே எடுத்துக்காட்டினமையும் உணர்த்துகின் றது.

இங்ஙனம், திறம்படக்கூறியபரணர் பாட்டிற்குப் பேகன் யாதுமாற்றம் உரைத்திருத்தல்கூடும்? ஒருபால் தான் செய்த குற்றம் வருத்த, மறுபால் தன் மனைவியின் புலம்புறு தனிமை யும், அவள் மனவருத்தமும் தோன்ற அவன் வாளாவிருந்திருப் பான் எனவே யான் நினைக்கின்றேன். இருப்பதைக்கண்ட பரணர், மீட்டும் அவனை நோக்கி, "ஒன்றுக்கும் பற்றாத மெல் லிய மயில், குளிரால் வருந்தல்கூடுமென அதன்மாட்டுப் பேரருள் கொண்டு, தன்னிடத்துள்ள ஓரேபோர்வையைத் தந்து, பொன் றாப் புகழ்கொண்ட ஏ,பேக! யாங்கள் பசியால் வருந்தி, அது நீக்குதல்வேண்டி நின்னையடைந்தோமில்லை. மற்று, இசையின் பத்தை விரும்பியுறைபவர்கள், இசையைக்கேட்டுக் "காகம்பிதத் துடன் சிரகம்பிதம்" செய்யுமாறு, இசைவல்லவர்கள் அதனை யிசைப்ப, நீ அறஞ்செய்தல் வேண்டுமென்பதே யாங்கள் நின் னிடத்தில் இரக்கும் பரிசிலாகும். ஏ! அருளை விரும்பிய அண் ணலே! அவ்வறந்தான் யாதெனின், நீ நின் இனமணி கறங்கும் தேரேறி இன்றிரவே சென்று, அக்கண்ணகியின் துயரத்தைத் தீர்த்தலாகும்" எனப்பொருள்படுவதும்,

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக!
பசித்தும் வாரேம் பாரமு மிலமே.
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்

நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
அறஞ்செய் தீமோ அருள்வெய்யோய்! என
இஃது யாம் இரந்த பரிசில் அஃது) இருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னா துறைவி யரும்படர் களைமே."

என வருவதுமாகிய வேறொரு பாட்டைப் பாடினர்.

இங்ஙனம், பேகனை விரைந்து சென்று அக்கண்ணகியின் துயரத்தை நீக்குமாறு கபிலர், பரணர் ஆகிய இருபெருஞ் சான்றோர் கூறியவற்றிற்கு அவன் தந்த விடையாதல், செய்த செய்கையாதல் ஒன்றும் தெரிந்திலது. இது இவ்வாறாக, அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் என்னும் தண்டமிழ்ச் சான்றோர் இருவர் அவட்காரணமாகப் பாடிவந்தனர். அவர் களுள் பெருங்குன்றூர் கிழார் என்பவர் "கற்குகைகளினின்றும் பல அருவிகள் தோன்றிவிழும் உயரிய மலைகளையும், காடுகளை யுங் கடந்து, யாம் எங்கள் யாழில் செவ்வழிப் பண்ணில் இனிய பாட்டுக்களைப்பாடி வந்தனம். வருங்கால், பருவங்கண்டு அழி யும் உள்ளத்தளாய்த் தனித்து நின்ற அழகிய அரிவை யொருத்தி எம் பாட்டிசையைக் கேட்டு நினக்காகப் பெரிதும் வருந்தினள். ஆகலின், நீ இன்னே எழுந்து விரைந்து சென்று, அவள் துயரத் தைப் போக்குதற்பொருட்டு, ஏ. ஆவியர் கோவே! நீ எம்மோ டும் வருதல் வேண்டும். இதுவேயாம் நின்னிடத்து விரும்பும் பரிசில்" என்னும் பொருளமைந்த

"கன்முழை யருவிப் பன்மலை நீந்திச்
சிறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்
கார்வா னின்னுறை தமியள் கேளா
நெருநல் ஒருசிறைப் புலம்புகொண் டுறையும்
அரிமதர் மழைக்கண் அம்மா வரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல இன்று பெயரின்
அதுமன் எம் பரிசில் ஆவியர்கோவே!"

எனவரும் பாட்டையும்; அரிசில் கிழார் என்பார்,

"போரில்வல்ல ஏ, பேக! இரவலர் வேண்டும் பொருள்களை வரையாது கொடுப்பவன் நீயன்றே. அது அத்தன்மைத்தாக, ஈண்டு நீதரும் அருங்கலன்கள், செல்வம் முதலியவற்றை யாம் பெறுதலை விரும்பேம். வன்புலமான மிக்க மலைவளம் பொருந்திய நின் மலைநாட்டைச் சிறிய யாழைக் கொண்டு செவ்வழிப் பண்ணில் யாம் பாடிவந்தமைக்காக, நீ களித்து எமக்குப் பரிசில் கொடுப்பாயேல், அது இதுபோது தரும் பரிசிலாகாது; பின்னர் அப்பரிசிற்றான் யாதோ வெனின், அது, ஏ, தலைவ; நீ அருளாமையால் கண்டார் இரங்க மெலிந்து அரிய துயரத்தால் வருந்துபவளும், உன்னுடைய திருந்திய அணிகலன்களையுடையவளுமான மங்கையொருத்தி, தன்னுடைய தழைத்தமயிற் பீலியைக் காலொன்றக் குவித்தாற் போன்ற மெல்லிய கூந்தலின் கண் நறும்புகை கொண்டு, மணமிக்க மாலை சூடிக்கொள்ளும் வண்ணம், நீ நின்குதிரைகளை நெடுந்தேரிற் பூட்டி இன்னே அவளிருக்குமிடத்திற்குச் செல்லுவதாகும்" எனப் பொருள் தரும்,

"அன்ன வாகநின் னருங்கல வெறுக்கை
அவைபெறல் வேண்டேம் அடுபோர்ப் பேக!
சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடு பாட வென்னை நயந்து
பரிசில் நல்குவை யாயின், குரிசில்! நீ
நல்கா மையின் நைவரச் சாஅய்
அருந்துய ருழக்குநின் திருந்திழை யரிவை
கலிமயிற் கலாவம் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தற் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே."

என்ற பாட்டையும் பாடினர்.

இவ்வண்ணம் மேற்போந்த நான்கு சான்றோர்களும், அவனது வள்ளன்மை, அருளுடைமை, புலவர்ப்புரத்தல்முதலியவை யேதுவாக, நெறிவழுவிக் குற்றமிழைத்த காலத்து, இடித்துரைத்துத் தக்கவழியிற் செலச்செய்தமையால், அவன், பின்

னர்த்தன் மனைவி கண்ணகியைக் கொணர்ந்து இல்லறம் நடாத்தி யிருத்தல் வேண்டுமென்பது தோன்றுகின்றது. அன்றியும், அவன் அங்ஙனம் செய்யாதிருப்பின், அப்புலவர்கள் வேறு எத்தகைய முயற்சிகளாவது செய்யாதிரார்; அவற்றைக் கூறுமலுமிரார். மற்று, அங்ஙனம் செய்ததாகவேனும், கூறியதாகவேனும், ஒருவகைக் குறிப்பும் நமக்குக்கிடைத்திலாமையின் நாம், முன்கொண்ட முடிபினையே கோடல்வேண்டும். இதுகிடக்க

இனி, இந்நிகழ்ச்சியால் நாம் அறியவேண்டியவை இவை யென ஆராய்வோம்:—

முதற்கண், அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும், மறங்கிடந்த திண்டோள்வலியும், பிறவும் உடையவனாயினும், பேகன், தன்மனை யிருக்க, பொதுமகளொருத்தியின் நலன் நயந்தான் எனின், அந்நலன் மிக்க வலியுடைத்தென்பதும்; அவன் என்றும் "அருள்வெய்யோன்" எனப்படினும், அந்நலவிருப்பால் தன்மனைவியைத் துறந்தான் என்றதனால், காமம் எவரையும் மனந்திரித்து ஈறில் துன்பத்தை யெய்துமாறு செய்யுமென்பதும்; பிறவும் தோன்றுகின்றன.

பின்னர், இவனால் துறக்கப்பட்ட கண்ணகியென்பாள், தன் காதலன் கண்டா ரிகழ்வனவே செய்கின்றா னென்பதை யறிந்தும், அவன் துறக்கினும், தான் அவன் நாட்டைவிட்டக லாது, அந்நாட்டுச் சிறார்க்கண் வாழ்ந்தனள் என்பதனால் அவள், கொண்டானையன்றிப் பிற பற்றுக்கோடு காணாக் குலமகள் என்பதும்; அவ்வூர்க்கண் இருந்து, அவனைப் புகழ்ந்து பாடுவார் பாட்டுக்களைக் கேட்குந்தொறும், "இத்தகையபுகழ்க் குரியன் நம் காதலனன்றே. அன்னோன், வேறொருத்தியின் நலன் நயந்து தன்புகழ்க்கு மாசு செய்துகொள்ளுகின்றானே; அம்மாசு அவன் குலத்துக்கே ஒரு இழிவைத் தருமல்லவா?" என்பன போன்றவற்றை யெண்ணிப் புலம்பினள் என்றதனால், அவள் பழியஞ்சி வாழும் பத்தினிப்பெண்ணாவா ளென்பதும்; 'கண்கலுழ்ந்து வாரிப்பனி பூணகம் நனைப்ப இனைதலானாள்' என்றதனால், அவள் தெய்வந்தொழாது கொழுநற்றொழுதெழும்

சிறப்பினள் என்பதும், எனவே, அத்தகைபோர்க்கெல்லாம் பிரிவென்பது கூற்றினும் கொடியதுயரம் தருவதென்பதும்; 'வரூஉம் என்ப வயங்கு புகழ்ப்பேகன்' என்றதனால், அவள், தன்னையவன் துறந்தமைக்குக் காரணம் தான் பண்டுசெய்த வினையேயென வெண்ணும் பேரறிவினள் என்பதும்; அதுபற்றியே, அவள் அவன்மீது மாறாத அன்புடையவளாய் "வயங்குபுகழ்ப் பேகன்" எனச் சிறப்பித்துக் கூறினளென்பதும்; அவ்வன்பின் உறுதியினால், அவன், தன்னைத் துறந்தமையறிந்தும், பிறள்நலன் வேண்டிவருதலை "என்ப" எனப் பிறர்மேலேற்றிக் கூறியதனால், அவள் தூய மனமுடையவளென்பதும் இவற்றோரன்ன பிறவும் பெறப்படுகின்றன.

முடிவாக, "நளியிருஞ் சிலம்பிற் சீறூர்" எனவும் "இனமணி நெடுந்தேரேறி, இன்னா துறைவியரும் படர்களைமே" எனவும், "வண்பரிநெடுந்தேர்பூண்க நின்மாவே" எனவும் சான்றோர்கள் கூறுதலின், அவள் அவனாற் றுறக்கப்பட்டிருந்தவிடம் வேறென்பதும்;

"வரூஉ மென்ப வயங்குபுகழ்ப் பேகன்
ஒல்லென வொலிக்கும் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே"

என்பதனால் அவன் உறைவிடம் வேறென்பதும், அப்பொழுது மகள் இருந்த ஊர் வேறென்பதும் அதன் பெயரே நல்லூர் என்பதும்; எனவே அவன் நாட்டின் தலைநகரம் அந்நல்லூரல்லவென்பதும் வெளிப்பட்டன. ஈண்டு "நல்லூரானே" யென்பதற்குப் புறநானூற்றுரைகாரரும், "நல்லூரின்கண்" என வுரைகூறுவதனால் இக்கூற்றே வலிபெறுதல் காண்க.

உ

குற்றியலுகரப் புணரியல்.

திருவாளர். மு. கோவிந்தராய நாட்டார்
அவர்கள் B. A. L. T.,

செந்தமிழ்த் தேன்றுளிக்கும் நந்தமிழ்ப்பொழிலின் கண்ணே, நண்பர், திருவாளர் சி. சோமசுந்தர முதலியாரவர்கள் எழுதிவரும் 'வரலாற்று மொழிகள்' என்னும் அரிய விரிவுடைக் கட்டுரையின் ஒரு சிறு பகுதியைப்பற்றித் துணர் இரண்டு, மலர் மூன்று நான்குளில் யான் எழுதிய 'எட்டு, ஒன்பது' என்னுந் தலைப்பினைக் கொண்ட வோராராய்ச்சியை அவர்கள் மலர் ஐந்து ஆறினில் 'வரலாற்று மொழியாராய்ச்சி விளக்கம்' எனும் பெயர் கொண்டு ஆய்ந்துள்ளார்கள். அவ்வுரை சிறந்த ஆராய்ச்சி கொண்டு செவ்விதாக எழுதப்பெற்றுள்ளது. தமிழ்நூற் பயிற்சியில் எனக்குள்ள நல்குரவை யுன்னி இத்துணை நுணுகிய வாராய்ச்சியிற் புகுவது தகாதென வெண்ணினேன். எனினும் அவ்வாய்வுரை முடிவில் நண்பர் அதனைக்குறித்த எனதாராய்ச்சியை வெளியிடுதல்வேண்டுமெனக் கூறியது அங்ஙன், எண்ணினேனை யும் ஊக்குதலான் இச்சிற்றுரை வரையத்துணிந்தேன்; குற்றியலுகரப்புணரியலைப்பெரிதும் தழுவுதலான் இதற்குக் குற்றியலுகரப் புணரியல் என்னும் பெயரும் பெறுவித்தேன்.

தொல்காப்பியம் காலத்தால் தமிழ்நூற்கள் எல்லாவற்றிற்கும் முன்னையது என்பது எல்லோராலும் ஒருதலையாகக் கொள்ளப்படு முண்மை. பல்காலும் பயின்றுளும் பயின்றறியா வொல்காப்புகழ்த் தொல்காப்பிய மெனுமோர் இலக்கண நூலியற்ற வந்தவ ராதலினல் ஆசிரியர் தொல்காப்பியனுர் தனது காலத்திற்கு முற்பட்ட பரந்த காலத்தில் விளங்கிய மக்கள் புலவோர் தழுவிப் செய்யுளும் வழக்கு முற்றவு முணர்ந்த

நற்ற வாராவாரென்பதும் யாவருமொப்பமுடிந்ததோ ருண்மையா கும். தமிழ்மக்களால் எட்டு ஓர் காலத்தில் இறுதி யெண்ணாகக் கொள்ளப்பட்டிருப்பின் பல்புகழ் நிறுத்த படிமையோராம் ஆசிரியர் அதனைத்தனது விரிந்தநூலிற் சுருக்கியாவது தெரித்த லாகாதோ? முந்துநூல்கண்டு முறைப்படவெண்ணிய அப்பொறி வாளர் கட்புலனுக்கும் செவிப்புலனுக்கும் உட்புலனுக்கும் எட்டாததோர் இறந்த காலத்தில் எட்டு இறுதி யெண்ணாகக் கொள்ளப்பட்டிருத்தலாகாதோ வென்னில் அத்துணைப் பழங் காலத்துச் செய்தியை இப்பொழுதைய மக்கள் பழக்கங்களிற் கொண்டு நிலைநிறுத்துவது இயலாததொன்று மென்றுணர்க.

ஒன்பதனைப்பற்றி ஆராயப்புகுந்து தெலுங்கெண்களையும் தமிழெண்களையும் ஒப்புநோக்கத் தமிழெண்களின் நிலைபெரிதும் இறும்பூதளிக்கின்றது என்றவழித் தருக்கமுறை பிறழுமாறு அறிதற்கில்லை. தொண்டு, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பன நூற்களில் ஆளப்படுமெண்கள்; தொன்னூறு, தொல்லா யிரம் அவ்வாறு ஆளப்படுவெனவல்ல. தொன்பது இருவகை வழக்கினும் காணப்படாததொன்று. குறையாத நூறு ஆயிரம் எனப்பொருள் தந்து நூறு, ஆயிரம் என்பனவற்றின் குறையாப் பண்பினை உறுதிப்படுத்தலான் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பன தொள்ளாநூறு தொள்ளாவாயிரம் என்னுங்கடாக்களை யெழுப்பினும் பழிப்பின்றாம். இவ்வாறு, புதியநூறு, புதிய வாயிரம் என்பன நூறு, ஆயிரம் என்னும் பொருள்களைச் சிறிதும் பயவாமை யுணர்க.

ஒன்றுமுதலொன்பானிறுதியெல்லா வெண்களுமுறையே பயின்றிருத்தலினாலே பரிபாடலினின்றும் மேற்கோள் காட்டப்பெற்றது. சில வடசொற்கள் காணப்படுதலினாலே ஒரு நூலைப் பிற்காலத்ததெனவொதுக்கித்தள்ளுவது ஆராய்ச்சி முறையாகாது. தொண்டு என்பது பழைய நூற்களில் பயின் றிருக்கின்றதெனக் கூறவியலாதென்று கூறிப் பின் தொல்காப் பியத்தினின்றே அது பயின்றிருக்குஞ் சூத்திரமொன்றை நண்பர் எடுத்துக்காட்டுகின்றார்:—

‘மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை எழுநூற்
றொன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே.”

இச்சூத்திரத்தில் எழுநூற்றொன்பஃதென்பதற்கு எழுநூற்றொன்று என்னும் பாடவேறுபா டிருத்தலின் தொண்டென்பதற்கு ஒன்பதென்னும் பொருளில்லை யென்று கூறுதல் எவ்வாறு பொருந்தும்? முதற்கண் தொண்டு ஈண்டோர் எண்ணுப்பெயரென்பது வெளிப்படை அவ்வாறு எண்ணுப் பெயராயின் அஃதெவ்வெண்ணோ? பாடவேறுபாடு கொண்டு தொடைகளின் தொகையைப் பலபடியாகக்கூறினும் செய்யுளியலுக்கு உரை செய்திருக்கும் ஆசிரியர் மூவரும் தொண்டென்பதற்கு ஒன்பதென்றே பொருள் கொண்டிருத்தலை நண்பர் அறியாரோ? அன்றித் தொண்டென்பதற்கு வேறு பொருள் கொண்டு உரை கூறியிருக்கும் ஆசிரியர் பிறரெவரேனு முளரோ? இனித் தொண்ணூறு தொள்ளாயிரம் என்பவற்றோடு தொண்டு என்பதனை ஒரு படித்தாக முறைப்படுத்தியதற்குத்தக்கதோர் மேற்கோள்காட்டுதும். தொண்டு, ஒன்பதன் மரூஉ என்பது ஆசிரியர் நச்சினார்க்கினியர் கருத்தாகும். இதனைக் ‘கிளந்தவல்ல செய்யுளுட்டிரிநவும்’ என்றஎழுத்ததிகாரப்புறனடைச் சூத்திரத்துக்குப் பொருள்கூறி மேற்கோள் காட்டும்வழி, “தொண்டுதலையிட்ட பத்துக்குறை என ணகரம் இரட்டாது தகர வொற்று டகர வொற்றாய்க் குற்றியலுகரம் ஏறிமுடிந்தது” என்று ஆசிரியர் கூறுதலால் உய்த்துணர்ந்து தெளிக. ‘தொல்பத்து தொன்பதாதலைவிடத் தொள்பத்து தொண்டாதல் எளிதன்று’. உண்மையே, எனினும், தொன்பது வழக்கொடு சிவணிய தொன்றன்றானமையின், தொல்பத்து ஒன்பதாதலைவிடத்தொள்பத்துத் தொண்டாதல் எளிதோவன்றோ எனவினவியுணர்க. இனிப் புணரியலில் இடைப்பெய்யப் பெற்றனவாகக் கூறப்படும் சூத்திரங்களைக் குறித்து ஆராய்தும்.

‘இச்சூத்திரமென்று யாம் ஒருமையில் எழுதியது, ஒரு பொருணுதலிய சூத்திரத்தானும்’ என்ற பொருளிலாதலின்

யாம் குறித்துள்ள எண்வகையால் இரண்டு சூத்திரங்களையுமன்றி நாட்டாரவர்கள் குறிக்கும் 'ஒன்று முதலொன்பான்' என்னுஞ் சூத்திரத்தையு முள்ளடக்கு மென்க என்பது நண்பரவர்கள் கூற்று. பன்மையை ஒருமையாகக் கூறுவதற்கு இச்சூத்திரத்தில் தோற்றுவாயுளதென இப்பொழுதுதான் யான் உணரலாயினேன். இதுவரையிலும் யாதானுமொருபொருளை யடக்கிய சூத்திரத்தானும் என்பதே இதன்பொருளென நினைந்து ஏமாந்தேன். நிற்க, இக்கூற்றினால் மூன்று சூத்திரங்கள் இடைப்பெய்யப்பெற்றன வென்பது நண்பர் உட்கிடை என்பது வெளிப்படை. கிணறு வெட்டப் பூதம் புறப்படலாயிற்று. குற்றியலுகரப் புணரியலின் சூத்திர வைப்பு முறையை உற்றுநோக்குழி இம்மூன்று சூத்திரங்களும் வேறு பல சூத்திரங்களோடு பிணைபட்டிருத்தலை ஒருதலையாகக் காணலாம். நண்பர் கருத்தின்படி 'ஒன்று முதலொன்பான் இறுதி' என்ற சூத்திரமும் இடைப் பெய்யப் பெற்ற தாகலான். (ஒன்பான் ஒகரமிசை என்ற சூத்திரம் நீங்கிய) அதன் வழிச்சூத்திரங்களாய ஏழும் இடைப் பெய்யப்பெற்றனவேயாகும். அன்றியும் 'கூறிய வியற்கைக் குற்றியலுகரம்' என்பது மாட்டேற்றால் 'குற்றியலுகரம் மெய்யொடுங்கெடுமே, என்பதனைச் சுட்டுகின்றமையால், 'ஒன்று முதலாக வெட்டனிறுதி' என்ற சூத்திரமுதல் நான்கு சூத்திரங்கள் இடைப்பெய்யப் பெற்றனவேயாகும்; 'கிளந்தவியல' என்பது முற்சூத்திரங்களைச் சுட்டுதலால், 'அளந்தறிகிளவியும்' என்ற சூத்திரமும் அதன் வழிச்சூத்திரங்களாகிய பதின்மூன்றும் இடைப்பெய்யப்பெற்றனவேயாகும்; "நூறு முன்வரினுங் கூறிய வியல்பே" என்பதில் 'கூறியவியல்பே' என்பது முற்சூத்திரங்களைச்சுட்டுதலினால் இச்சூத்திரமும் (ஒன்பான் முதனிலை என்னுஞ் சூத்திரம் ஒழிந்த)இதன் வழிச்சூத்திரங்களாய இரண்டு சூத்திரங்களும் இடைப்பெய்யப் பெற்றனவேயாகும். உற்றுநோக்குழி ஏறக்குறைய குற்றியலுகரப்புணரியலே இடைப்புகுத்தப்பெற்றதாகின்றது. ஆதலின் இஃதின்னவாறு தலைக்காட்டும்கடப்பாடொன்றும் நண்பரவர்களுக்கு எஞ்சியுள்து.

இனி மேற்செல்லுதும். பத்து ஒன்பதொடு புணர்வதற்குச்

சூத்திரம் செய்யாது விடுத்தமைக்கு நண்பர் கூறுமாறு: குற்றுகரம் கெடுதல்தவிர பிறவேறுபாடுகள் இலவாதலோடு, "ஒன்று முதலாகிய பத்தூர்கிளவி" என்னுஞ்சூத்திரத்துள் ஆசிரியர் அதனை அடங்கவைத்தமையுங் காரணமாகும். 'ஒன்பது குற்றியலுகரமின்மையின்' என்றும், 'ஒன்பது குற்றியலுகரமாமாறு பின்னர்க்காட்டுதும்' என்றும் முன்னெடுபின் முரணக்கூறினும் நண்பர் கருத்து ஒன்பது குற்றியலுகரம் அன்றென்பதே எனத் தெரிகின்றது. 'ஒன்பது' குற்றியலுகரமன்மையின் அது பிறவற்றோடு புணர்வதற்குக் குற்றியலுகரப் புணரியலில் சூத்திரம் செய்வதற்கு இயைபு இல்லையென்று கூறுமுகத்தானே 'ஒரு பொருளுதலிய சூத்திரத்தானும்' என்ற பொருளில் அவர்கள் கொண்ட மூன்று சூத்திரங்களும் இடைப்பெய்யப் பெற்றனவென்னுங் கொள்கையைக்கொள்ள வைத்துள்ளார் நண்பர். இக் கொள்கையின்படி

ஒன்பா னிறுதி யுருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டுஞ் சாரியை மொழியே.
ஒன்பா னிறுதி யுருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டுஞ் சாரியை மரபே.

என்னும் இரண்டு சூத்திரங்களும் இடைப்பெய்யப் பெற்றனவாதல் வேண்டும். இச்சூத்திரங்களைச் சுட்டுவதற்கு நண்பர் மறந்தனரோ அன்றி இவைகளையும் 'ஒரு பொருளுதலிய சூத்திரத்தானும்' என்ற பொருளில் அடங்கவைத்துள்ளாரோ அறியேன். ஒன்பதன் பெயர் வருஞ்சூத்திரங்களையும் அவை தம்முளும் பிறசூத்திரங்களோடு பிணைந்திருக்கு முறையையும் ஊடுருவியாராய்வார்க்கு அவைகள் தொல்காப்பியர் செய்தனவேயாமென்பதும், ஆசிரியர் நச்சினார்க்கினியரின் கருத்தின்படி ஒன்பது குற்றுகரமாம் என்பதும் தெற்றெனப் புலனும். சாரியை ஏற்று நிற்கும் ஒன்பான் என்னும் பெயரை அவ்வாறே உரையிற்கொள்ளாதுவிடுத்தல் நச்சினார்க்கினியரது தவறாகாது. நுண்மாணுழை புலஞ்செலுத்தி . ஆசிரியருடைய உளக்கருத்தினைத் தெள்ளிதினள்ளிவழங்கும் உரையாசிரியர்களுடைய உரைகளை ஆய்வின்றிப் பொருந்தாவுரையென வொதுக்குவதும், பின் அவ்வாறு

கூறுதலினால் உரையாசிரியர் பெருமை குறையுமெனக்கருதி அவர்களுடைய பொருளைப் பிறருக்கு வலிந்தெடுத்து வழங்குதலும் வேண்டா. உண்மையிற் சிற்சில தவறுகள்நேரினும் ஆசிரியர் பெருமை எட்டுணையுங்குறையாது. மறதி, சோர்வு முதலியன மக்கள் எல்லோருக்குமுண்டாகக்கூடியவையே.

'ஒன்பான் ஒகரமிசை' என்ற சூத்திரத்திற்கு உரை கூறிக் காட்டும்வழி, "இவ்வுரைப்படி தொண்ணூறுதற்கு இடைநின்ற பது ஒழிய விதி காண்கிலம்" என்றும், "மற்றோருரை..........." என்றுங் கூறுவதிலிருந்து, ஆசிரியரது உரை நண்பரை மயங்கச் செய்துவிட்டதென்பதும், அம்மயக்கம் காரணமாகப் பற்பல வையங்கள் நண்பருக் கெழுந்தனவென்பதும் வெளியாகின்றன. சூத்திரத்திற்கு ஆசிரியர் ஈருரை கூறினரிலர். முதலிற் கூறியது சூத்திரவுரை; மேற்கோள் காட்டுமுகத்தான் பின்னர்க் கூறியது முதலுரையாற் போந்ததோர் ஐய மறுக்குந் தெளிவுரையாம். 'ஒன்பான் முதனிலை முந்து கிளந்தற்றே' என்ற சூத்திரத்திற்கும் ஏனைப் பலசூத்திரங்களுக்கும் ஆசிரியர் கூறியுள்ள உரைகளை ஒப்புநோக்குக. ஆகையான் இச்சூத்திரவுரை, 'இஃது எய்தாதது எய்துவித்தது' என்று தொடங்கி, 'தொண்ணூறெனமுடிக்க' என்பதனோடு முடிகின்றது. 'பகரவாய்த மென்னாத முறையன்றிக் கூற்று' என்பது சூத்திரத்தில் "பஃதென்கிளவி" என்பது "ஆய்தபகரம்" எனமுறைமாறி நிற்றலைக் குறிக்கும் இலேசாகும். "ஐந்துமூன்று நமவருகாலை" என்ற சூத்திரவுரையில், 'மூன்றும் ஐந்தும்' என்னாத முறையன்றிக்கூற்று' எனவருதலைக் காண்க. இவ்வாறுகொண்டு சூத்திரவுரையை ஊன்றிப் படிப்போமாயின் ஒன்பது + பஃது தொண்ணூறுவது புலனும். 'நிலைமொழிக்கட் பகரங்கெடுத்து' எனக்கூற நினைந்தவர் 'பகரமும் ஆய்தமும் கெடுத்து' எனவெழுதினமையால் ஆசிரியர் சிறிது மறதிவாய்ப் பட்டனரென்பதும் தெரிகின்றது. மறதியென எவ்வாறு ஓர்ந்தோமெனிற் கூறுதும். சூத்திரவுரையின் முதலிலே ஒன்பது எனக்கூறுவதையும், பிறசூத்திரங்களில் ஒன்பான் என்பதற்கு ஒன்பது எனவே ஆசிரியர் பொருள்கூறிச் செல்லுதலையும் ஒப்பு நோக்குக. இச்சூத்திரத்திற்குப் பெரிதும் ஒப்புமையுள்ள 'ஒன்